
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
6
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்

## பாகம் - 6

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்.

# என்னுரை

இந்துசமய நூல்கள் பலவற்றைக் கற்றதால் அதன் உட்பொருளை உணர்ந்து அவற்றை உங்களின் பார்வைக்கு வைக்கிறேன். இவை யாவும் கற்றதாலும், அனுபவத்தாலும் ஏற்பட்டவை.

இந்நூலின் எழுத்துப்பிழைகளை நீக்கிச் சீர்செய்து தந்த ஆசிரியை செல்வி இறைமகள் பரநிரூபசிங்கம் அவர்களுக்கும், திரு. வா. ஜெயரத்தினம் அவர்களுக்கும், கணனியில் வடிவமைத்துத் தந்த செல்வி. க. தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்கும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

அன்புடன்
கே. வி. குணசேகரம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

இந்து தர்மம் காமத்தைத் துறக்க வேண்டும் என்றும், காமத்தால் தான் உலகில் தீமைகள் உருவாகின்றன என்றும் சொல்கிறது. இது உண்மையா?

காமத்தை ஞானமாகக் கண்ட மதம் இந்து மதம். உலகில் கிடைக்கும் இன்பங்கள் யாவும் பெண்களிடமே உண்டு. அதை எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என்று கூறுவது இந்துமதம். அறம், பொருள், இன்பம் யாவும் உனது வீட்டுக்குள்ளேயே இருக்கிறது. அதைத்தேடி வேறெங்கும் அலையாதே. உலக இன்பங்கள் யாவற்றையும் உனது வீட்டுக்குள்ளேயே அனுபவி என்று கூறுவது இந்துமதம்.

ஒருவனுக்கு வாழ்க்கைத்துணையாக நல்ல மனைவி கிடைத்தால் அவனைவிடப் பாக்கியவான் இந்த உலகில் யாரும் இல்லை.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்னையும் காத்து தனது கணவனின் நலன்களையும் பேணிக்காத்து அன்பாகப் பேசி வாழ்கின்றவளே பெண்.

60. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலன் என்றும் பெரியோர் கூறுவர்.

நல்ல மனைவி கிடைத்தால் நல்ல மக்கள் கிடைப்பார்கள். நல்ல மக்களைப் பெற்றவனுக்கு இவ்வுலகிலும் சரி மறு உலகிலும் சரி துன்பம் வராது. அவனைத் துன்பம் நெருங்கப்பயப்படும்.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்புகள் இல்லாளிடம் இல்லாவிட்டால், ஒருவனுடைய வாழ்க்கையில் பல்வேறு விதமான வசதிகள் இருந்தாலும் அதனால் பயன் ஏதும் ஏற்படமாட்டாது.

என்று வள்ளுவர் கூறுகிறார்.

காமத்தை இந்துமதம் ஞானமாகக் கொள்கிறது என்று நான் முன்பே சொன்னேன். ஒருவனது காமம் தீர்க்கப்படாமையால் தான் அவன் தீமைகளைச் செய்கிறான்; இன்னொரு பெண்ணை நாடுகிறான். திருப்திப்படாத காமம் இதயத்துள் எரிமலையாக எவ்வேளையிலும் குமுறிக்கொண்டே இருக்கும். அது குமுறிவெடிப்பதால் சமூகத்தில் பல்வேறு வகையான ஒழுக்கக்கேடுகள் நடைபெறுகின்றன. வயிறார உண்டவன் மேலும் உண்ண விரும்பமாட்டான். அதுபோலத் தனது மனைவியிடம் பூரணமான இன்பத்தை அனுபவித்தவன் இன்னொரு பெண்ணை நாடமாட்டான். பொதுவாகப் பெண்கள் எல்லோரும் ஒரேமாதிரியானவர்கள். அவர்களது மனம் தான் பல்வேறு வகையானது. இதனால் தான் பிரச்சினைகள் தோன்றுகின்றன. பொதுவாக இந்து மதத்தில் விரதங்கள்

அனுட்டானங்கள் மிகவும் அதிகமாக உள்ளன. பெண்கள் மதத்தையும், மதக்கடமைகளையும் நம்புவதைப் போலத் தமது கணவன்மார்களையும் நம்பவேண்டும். கடவுளை விரும்புவதை விடத் தமது கணவனை விரும்பவேண்டும். கடவுளைப் போலத் தனது கணவன் மேம்பட்டவனென நினைக்கின்ற பெண்கள் காமத்தை வென்றுள்ளனர். காமத்தை வென்றவன் தனது மனைவியை அளவுக்கதிகமாக நேசிப்பான். அவளும் அவனைத் தனது உயிராகக் கருதுவாள். இல்லற இன்பத்தை முழுமையாக அனுபவிப்பவனுக்குத் தனது குடும்பத்தைத் தவிர வேறு எதுவும் நினைவுக்கு வராது.

நல்லதொரு மனைவி தனது குடும்பத்தை நேசிப்பதைப் போலத் தனதும், கணவனினதும் குடும்பத்தினரையும் நேசிப்பாள். அதனால் அவள் தான் வாழும் சமூகத்தையும் நேசிப்பாள்.

நாம் தேவாரங்களையும், திருவாசகத்தையும், திருப்புகழையும் எடுத்துப் பார்த்தால் பெண்ணால் வரும் இன்பங்களைப் பற்றி மிகவும் விரிவாகவும் சுவையாகவும் அவை கூறுகின்றன. இலக்கியங்கள் பெண்ணிடமிருந்து பெறும் இன்பங்களைப் பற்றிச் சுவையாகக் கூறுகின்றன.

இராமாயாணத்தில் இராமன் சீதை மீது கொண்ட காதலும், அவள் மூலம் பெற்ற இன்பமும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. இதைவிடப் பகவான் கிருஷ்ணனும் ராதையும் கொண்ட காதலும் அதனால் பெற்ற இன்பமும் காம ரசமாகவே கூறப்பட்டுள்ளன இதை யாரும் ஆராய்ந்து பார்ப்பதில்லை.

ராதையும் கிருஷ்னனும் தனிமையில் சந்திப்பது பற்றி ஆழ்வார்கள் பாடியுள்ள பாடல்கள் காமரசம் மிக்கவை. இருவரும் செய்கின்ற லீலைகள் கணக்கிலடங்காதவை.

அத்துடன் எல்லைக்கு அப்பாற்பட்டவை. பல இடங்களில் பச்சையாகக் கூறப்பட்டுள்ள விடயங்களை முதலில் படிக்கும் போது மனம் கூசும்; விரசம் கொப்பளிக்கும். இரண்டாம்முறை, மூன்றாம் முறை படிக்கும் போது மனம் தெளிவடைந்து மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டுமென்ற ஆர்வம் மேலிடும். அந்த ஆர்வம் செயலில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் தோற்றுவிக்கும்.

ஒருவனும் ஒருத்தியும் எப்படியெல்லாம் இன்பத்தை நுகரவேண்டுமென்று இந்துமதக் கடவுள்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர். இருந்த போதும் காம இன்பத்தை அனுபவிப்பதும், அதைப் பற்றிப் பேசுவதும், அதைப் பற்றி அறிந்து கொள்வதையும் பொரும்பாலான இந்துக்கள் பாவமாகக் கருதுகிறார்கள். அத்துடன் விரத நாட்களில் இன்பத்தை அனுவித்தால் பாவம் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள்.

இந்துக்களைப் பொறுத்தவரையில் வருடத்தில் உள்ள முன்நூற்று அறுபத்தைந்து தினங்களும் விரத தினங்களாகும். அப்படி இருக்கையில் விரத தினங்களில் காம இன்பத்தை அனுபவிக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். இந்த நிலையால் தான் குடும்பங்களில் பல்வேறு பிரச்சினைகள் உண்டாகின்றன. ஆரம்பத்தில் சிறிதாக எழுகின்ற பிரச்சினைகள் நாளடைவில் பெருத்துப் பூதாகரமாகிக் குடும்பப் பிரச்சினைகள் பலவற்றைத் தோற்றுவிக்கின்றன. அதனால் சமூகத்திலும் தீமைகள் உண்டாக வழிவகுக்கின்றன.

ஒருத்தனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்து காட்டியது இராமாயணம். இராமனும் சீதையும் மன உறுதியுடன் வாழ்ந்தமையால் தான் ஒரு காவியம் உருவானது. அந்த நிலை தான் எல்லாத் தீமைகளையும் அழித்தது.

காமத்தைத் திருப்தியாக அனுபவிப்பவனை வெல்ல யாராலும் முடியாது. அவன் கடவுளின் ஆளுகைக்குட்பட்டவனா கையால் அவனை வந்தடையத் துன்பங்கள் அஞ்சும்.

இந்துத் தெய்வங்களின் காதல் வாழ்க்கையை மிகவும் சுவையாக இலக்கியங்கள் கூறுகின்றன. அவை மனிதன் அப்படி வாழவேண்டும் என்பதற்காகவே வெளிப்படையாக ஒளிவு மறைவின்றிக் கூறுகின்றன. இலக்கியங்கள் கூறுகின்ற நடைமுறைகளைப் பின்பற்றி வாழவேண்டுமென்று நினைக்கின்ற மனிதர்கள் இலக்கியங்கள் கூறும் காதல் வாழ்வையும் அதன் சுவையையும் பாவமென நினைப்பது வருந்தத்தக்கது.

இந்து இலக்கியங்கள் யாவும் காமத்தைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் வைணவ இலக்கியங்கள் பச்சையாகக் கூறுகின்றன. இதை ஒவ்வொருவரும் அறிந்து அதன்படி நடக்க வேண்டும் என்பதே அதன் தத்துவமாகும். அதற்காகத்தான் வைணவ இலக்கியங்கள் கிருஷ்ணனும் ராதையும் காதல் இன்பத்தை அனுபவிக்கும் முறையைப் பற்றிச் சற்று பச்சையாகக் கூறுகின்றன.

ராதை கிருஷ்ணனைக் காணாது படும் துன்பத்தைக் கண்ட அவளது தோழி கிருஷ்ணனிடம் சென்று ராதையின் துன்பத்தைப் பற்றிக் கூறுமிடங்கள் விரசம் மிக்கவை. எனினும் ஒரு காதலி தனது காதலனைக் காணாது தவிக்கும் தவிப்பை உணர்த்துபவை.

“கண்ணா நீ ராதையின் நினைப்பில்லாமல் இருக்கிறாய். ஆனால் அவள் உன்னை நினைத்து உருகி உருகி மாய்கிறாள். அவளது உடல் அனலாகக் கொதிக்கிறது. அதனால் அவளது உடலெங்கும் குளிர்மை மிக்க

சந்தனத்தைக் கரைத்துப் பூசினேன். பூசியவுடன் அது காய்ந்து உதிர்கிறது. அன்றலர்ந்த மலர்களைப் பறித்து அவளின் கூந்தலில் சூடினேன். அது உடனே வாடிப் பொலிவிழந்து விட்டது. மீண்டும் மீண்டும் சூடினேன். அப்படிச் சூடச்சூட மலர்கள் வாடிக்கொண்டிருக்கின்றன. அவளது வெப்பத்தைத் தணிக்கும் சக்தி உனது அன்புக்கு மட்டும் தான் உண்டு. ஓடிவந்து அவளைக் கட்டித் தழுவி முத்தமிடு. இல்லாவிட்டால் அவள் பைத்தியக்காரியாகிவிடுவாள். அதன் பின் நீ வந்து அணைப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை" என்கிறாள். இதை அறநூலான திருக்குறளும் கூறுகிறது.

1270. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்
உள்ளம் உடைந்துஉக்கக் கால்?.

பிரிவுத் துன்பத்தைத் தாங்காது காதலியின் உள்ளம் உடைந்து சிதைந்து விட்டால் அவள், என்னைப் பெறுவதால் என்ன பயன்? அன்றியும் முன்பு நான் அவளைப் பெற்றிருந்தால் என்ன பயன்? அன்றி அவனைத் தழுவுவதால் என்ன பயன்? ஒன்றுமில்லை.

1234. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

கணவர் விட்டு நீங்கியதால் மெலிந்த அழகான தோள்கள் வாடிவிட்டன; பருத்த தன்மை கெட்டு உடல் மெலிந்ததால் வளையல்களும் கழறச் செய்கின்றன.

1236. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

வளையல்கள் கழன்று விடுமாறு எனது தோள்கள் மெலிவடைந்ததால், என்னைக் காண்போர் எனது காதலர் கொடியவர் என்று கூறுவதைக் கேட்கத் துன்பமாக உள்ளது.

1251. காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

நாணம் என்னும் தாழ்ப்பாள் இட்ட நிறை என்று சொல்லப்படும் கதவைக் காமமாகிய கோடாரி உடைத்து விடுகின்றது.

1257. நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

நான் விரும்பிய காதலர் காமத்தால் நான் விரும்பும் இன்பங்களைத் தருவாரானால், நாணம் என்று ஒன்று இருப்பதை நான் அறியாமல் இருந்திருப்பேன்.

1101. கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் அனுபவிக்கின்ற ஐம்புல இன்பங்களும் ஒளி பொருந்திய வளையலை அணிந்த இவளிடம் உள்ளன.

1103. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தாமரைக் கண்ணனின் தேவருலகம், தான் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களில் சாய்ந்து தூங்குவதை விட இனிதாகுமோ...?

1106. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

அவளது தோள்களைத் தழுவும் போதெல்லாம் என்னுயிர் தளிர்க்கும் படி தீண்டுவதால், இவளது தோள்கள் அமிழ்தத்தினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1108. வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை
போழப் படாஅ முயக்கு.

காற்றுக் கூட இடையே புகுந்து செல்லாத படி நெருங்கி அணைத்து மகிழ்வது, ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமையானதாகும்.

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேன் கலந்ததைப் போன்ற சுவையுடையது.

1297. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சில் பட்டு.

காதலரை மறக்க முடியாத என்னுடைய மடமை பொருந்திய நெஞ்சோடு சேர்ந்து, மறக்கத் தகாததாகிய நாணத்தையும் நான் மறந்து விட்டேன்.

அத்துடன் அறநூலான திருக்குறள் காமத்தைப் பற்றி கௌரவமாகக் கூறமுனைந்தாலும் அதன் தன்மை அதை காமரசம் மிக்கதாக மாற்றிவிட்டதை நாம் முன்னுள்ள குறள்கள் மூலம் கண்டு கொள்ளலாம்.

இதைவிடத் திருவள்ளுவர் காம இன்பத்தை அனுபவிக்கும் போது பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் சொல்கிறார்.

1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

காமம் பனையளவாக நிறைய வரும் போது பெண்கள் காதலரோடு திணையளவாகக் கூடப் பிணக்கம் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

அதைவிட காதலிக்கின்ற பெண்ணுக்கு வரும் துன்பங்களைப் பற்றியும் வள்ளுவர் கூறுகிறார்.

1147. ஊரவர் கௌவை எருஆக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

இந்தக் காம நோயானது ஊரார் தூற்றுகின்ற அலரை எருவாகவும் அன்னை கடிந்து உரைக்கும் கடுஞ் சொற்களை நீராகவும் கொண்டு செழித்து வளர்கிறது.

1148. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

அலர் கூறுவதால் காமத்தை அடக்கலாமென முயல்தல், நெய்யால் நெருப்பை அனைப்போம் என்று முயல்வதைப் போன்றது.

இதைவிட எப்படிப்பட்ட பெண்ணாக இருந்தாலும் கணவனால் விரும்பப்படாத பெண்ணைச் சமூகம் மதிக்காது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

உலகத்தவரால் மதிக்கப்படும் பெண்களாக இருந்தாலும், அவள் தன் காதலனால் விரும்பப்படாதவள் என்றால் அவள் தீவினை உடையவளாவாள்.

எப்படி ஓர் ஆணும் பெண்ணும் கூடியிருத்தல் வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1327. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் தோன்றிய உப்பு.

ஊடலிலே தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவார்; அந்த உண்மையானது ஊடல் முடிந்து கூடி மகிழும் போது தெரிய வரும்.

ஜெயதேவரின் "அஷ்டபதி கீதகோவிந்தம்" என்ற நூலைக் கவிஞர் கண்ணதாசன் தமிழிற் பாடினார். அதில் வரும் சில அடிகள் இவை.

"ஆற்றங்கரையருகே ஆனந்தத் தென்றலடி
பற்றியொரு கரத்தால் பாசமிகு
கோபியரின் கொங்கை தழுவி
வனமாலி விளையாட!
பூமகள் விரித்த மஞ்சம்; பொன்னுடலைச்
சாய்ந்தவுடன்,
மேகலை அவிழ்த்துவிடு! மோகத்தோடு உறவாடு....."
இப்படிக் கண்ணதாசனின் மொழிபெயர்ப்பு உள்ளது.

கண்ணனுடன் கூடிக் குலவி மகிழ்வுடன் உறவு கொண்டு விட்டு வரும் ராதையைச் கேலி செய்கிறாள் தோழி.

"தோழியே, உதட்டில் நான் பூசிய சாயத்தைக் காணவில்லை. கண்ணுக்கிட்ட மை முகத்திலும் நெற்றியிலும் பரவியிருக்கிறது. முகத்திலும் கழுத்திலும் அதற்குக் கீழேயும் உள்ள காயங்கள் பற்கீறலா அல்லது நகக்கீறலா...? உடலெங்கும் பூசிய சந்தணத்தைக் காணவில்லை" என்றாள்.

கண்ணனும் ராதையும் தனிமையில் இருந்ததைப் பச்சையாக விரசம் கலந்து ஜெயதேவர் பாடியதை மேலும் விரசமூட்டக்கூடியவாறு பாடுகிறார். கண்ணதாசன். இது ஏன்? கடவுளைப்பற்றி இப்படிப் பாடலாமா..? பாடக்கூடாது.

அப்படியிருக்கப் பாடியிருக்கிறார்களென்றால் ஏன் அப்படிப் பாடினார்கள்?

புராணங்கள், இதிகாசங்கள் யாவும் கடவுளைத் தொழுவதால் உண்டாகும் நன்மைகள் பற்றி விரிவாகக் கூறுகின்றன. அதில் கூறப்பட்டபடி மக்கள் நடந்து கொள்ளவேண்டுமென்று கோயில்களில் பிரசங்கிகள் கூறுகின்றனர். அதை மக்கள் பின்பற்றுகிறார்கள். அதுபோல அதில் கடவுள்மார் பெற்ற இன்பத்தை மக்களும் பெறல் வேண்டும். அவர்கள் காமலீலைகள் புரிந்ததைப் போல மக்களும் புரிய வேண்டும் என்று இந்து தர்மம் கூறுகிறது.

இந்துக் கோயில்களைப் பார்த்தால் அதன் சுவர்களில் பெண்களின் கவர்ச்சியான படங்கள் கீறப்பட்டுள்ளன. மார்புக்கச்சையுடன் எத்தனை பெண்கள் வரையப்பட்டுள்ளனர். தூண்களிலும், கோபுரங்களிலும், தேரிலும் வைக்கப்பட்ட பொம்மைகளைப் பாருங்கள். அவை யாவும் கவர்ச்சி மிக்கவையாக இருந்த போதும் காம உணர்வைத் தூண்டவில்லை. அதற்குக் காரணம் காமம் ஞானமாக அங்கு சித்தரிக்கப்படுகிறது.

சிவலிங்க வடிவத்தை யாரும் காம உணர்வுடன் பார்ப்பதில்லை. இதிலிருந்து காமம் ஒரு யோகம் என்று புலனாகிறது.

காமம் பூர்த்தி செய்யப்படாவிட்டால் மனக்குழப்பம் உண்டாகும். மனக்குழப்பமேற்பட்டால் வாழ்க்கையில் நிம்மதி இருக்காது. நிம்மதியில்லாவிட்டால் புத்தி நாசமடையும். புத்தி நாசமடைந்தால் மனிதன் அழிந்துவிடுவான். இதை நான் பல குடும்பங்களில் கண்டுள்ளேன். தாம்பத்தியத்தில் உண்டாகும் திருப்தியின்மை தான் சமூகச்சீரழிவுகளுக்கு வித்திடுகிறது.

தனது மனைவிடயிடம் பூரண இன்பத்தைப் பெறுபவர்களின் துன்பங்கள்அனைத்தும் ஒழிந்துவிடும். ஏனெனில் திருப்தியான மனமுடையவனின் அறிவு எவ்வேளையிலும் விழித்துக்கொண்டே இருக்கும். அதனால் அவன் தீமைசெய்ய மாட்டான்.

உடல் உணர்ச்சிகளில் கொடுமையான காம உணர்ச்சி அடங்காதவனின் மனம் அமைதி கொள்ளாது. அதனால் அவனுக்கு ஆத்மபோதமில்லை; ஆத்ம பாவனையும் இல்லை; மனச்சாந்தியும் இல்லை. மனச்சாந்தியில்லாதவனுக்கு இன்பம் இல்லை.

நீரின் மேல் நிற்கும் கப்பலைக் காற்று அசைப்பது போல மனிதனது மனத்தைக் காமம் அசைத்துக்கொண்டே இருக்கும். அதனால் அவனது இந்திரியங்கள் இன்பத்தை நாடி அவனது அறிவை மயக்கும். இதனால் அவன் மனிதனாக வாழாது மிருகமாகி விடுவான். மனிதனை முழுமைபெறச் செய்வது காமம். காமத்தை முழுமையாக அனுபவித்தவனது மனது இந்திரியங்களின் போக்கிற்கேற்பச் செல்லாது. இதற்காகத்தான் இந்து தர்மம் கடவுள்கள் மூலமாகக் காமத்தைக் கூறுகிறது.

அசைவற்றிருக்கும் கடலுள் ஆர்ப்பரித்துச் செல்லும் ஆறுகள் அடங்குவதைப் போல, எந்த மனிதனிடத்து அடங்காத தன்மையுடைய காமம் அடங்குகிறதோ அவனே முழுமனிதன்.

மனதைச் சமநிலைப்படுத்துவது காமம். காமத்தை வென்றவனால் எதையும் செய்ய முடிகிறது. தனது மனைவியிடம் பூரண இன்பத்தை அடைபவனின் மனம் ஞானியினது மனதைப் போலச் சமாதி நிலையடையும். அம்மனிதன் என்றும் இன்பமுள்ளவனாக வாழ்வான்.

ஒரு முனிவரின் ஆச்சிரமத்மிற்குச் சிறிது தூரத்தில் ஒரு தாசியின் வீடு இருந்தது. முனிவா் தனது மனைவியுடன் இன்பமாகத் தவம் செய்து வந்தாா்.

அத்தாசியின் வீட்டுக்குத் தினமும் பலா் வருவாா்கள். முனிவா் அவா்களைத் தினமும் பாா்ப்பாா். ஒரு நாள் அவா் அத்தாசியின் வீட்டிற்குச் சென்றாா். தாசி அவரை பக்தியுடன் வரவேற்று ஆசனத்தில் இருத்திவிட்டு எதிரே அடங்கி ஒடுங்கி நின்றாா்.

“தாயே, காமம் என்பது ஒருவகை யோகம். காமத்தைப் பூரணமாகத் தீா்த்துக் கொள்பவா்கள் ஞானிகளாகிவிடுவாா்கள் என்று எமது மதம் கூறுகிறது. அப்படியிருக்க நீ தினமும் பலருடன் கூடி மகிழ்கிறாயே உனக்கு அதில் திருப்தி ஏற்படவில்லையா?” என்று கேட்டாா்.

“சுவாமி, நீங்கள் கூறுவது எதுவும் எனக்கு விளங்கவில்லை. இதை எனது வாழ்வாகக் கொண்டிருக்கிறேன். இதன் மூலம் தான் எமது வாழ்க்கை நடைபெறுகிறது” என்றாள்.

“இதில் உனக்குத் திருப்தி ஏற்படுகிறதா?” என்று கேட்டாா் முனிவா்.

“இல்லைச் சுவாமி. இங்கு வரும் எவரையும் எனக்குப் பிடிப்பதில்லை. வீட்டில் மனைவி கொடுக்கும் சுகத்தில் திருப்தி காணாதவா்கள் தான் இங்கு வருகிறாா்கள். இங்கு வருவோா் திருப்திப்படுகிறாா்களோ என்று நான் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் அவா்களது உறவால் உண்டாகும் இன்பம் எனது ஆத்மாவைத் திருப்திப்படுத்தவில்லை. நான் ஒருவரை விரும்பினேன். அவருடன் ஒருமுறை கூடியிருந்தேன். அந்த

உறவில் உண்டான இன்பம் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. அந்த இன்பம் எனது ஆத்மாக்குள் குடியிருந்து நினைக்கும் போதெல்லாம் இனிக்கிறது'' என்றாள்.

சுவாமியார் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தின் பின் அவள் சொன்னாள்; ''சுவாமி ஆத்மாவும் ஆத்மாவும் கலந்துறவாடுவது தான் இன்பம்; அது பேரின்பம். எனது காதலர் தினமும் வந்து என்னுடன் கூடியிருப்பாரானால் எனக்கு வேறு எதுவும் தேவைப்படாது''

முனிவர் எழுந்து அவ்வூரில் வாழும் தனவந்தனின் வீட்டிற்குச் சென்றார். அவனிடம் பத்துச் சந்ததிக்குப் போதுமான அளவு சொத்து இருந்தது. அதனால் அவன் பல பெண்களுடன் உறவு வைத்திருந்தான். அவனிடம் முனிவர் கேட்டார்.

''வணிகரே, நீர் தினமும் பல பெண்களிடம் சென்று வருகிறீர். அவர்களில் ஏதாவது வித்தியாசம் இருக்கா....''

வணிகன் திகைத்துப் போனான். முற்றும் துறந்த முனிவர் ஏன் இப்படியானதொரு கேள்வியைக் கேட்கிறார் என நினைத்தான்.

''வணிகரே, காமத்தை ஞானம் என்று இந்துமதம் கூறுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்பது தத்துவம். அதை மீறி நீ பெண்பித்துக் கொண்டு அலைகிறாய். அதனால் அதில் ஏதாவது புதுமை இருக்கா என்று அறியவிரும்புகிறேன்'' என்று கேட்டார் முனிவர்.

''இல்லைச் சுவாமி. நல்ல குளிர்ந்த நீரில் பல்வகையான மலர்களைப் போட்டுவிட்டுக் குளித்தாலும் மலர்களின் தன்மை தெரியாது. தண்ணீரின் மென்மை தான் தெரியும். இது போன்றது

தான் பெண்கள் தரும் சுகமும். எந்தப் பெண்ணும் ஒரேமாதிரியானவளாகத் தான் இருக்கிறாள். எனது மனைவி நிறைந்த கடவுள் பக்தியுள்ளவள். அவள் தினமும் விரதம் அனுஷ்டிப்பாள். அதனால் அவள் என்னுடன் உறவு கொள்ளமாட்டாள். அவளுடன் உறவு கொள்ளும் போது அவள் கடவுளை நினைத்து என் மீது அதிக அன்பு செலுத்தி முழுமையாகத் தன்னை எனக்கு அர்ப்பணிப்பாள். எந்தவிதமான கோரிக்கையும் விடமாட்டாள்; நிபந்தனையும் விதிக்க மாட்டாள். அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கமாட்டாள். அதனால் அவள் தான் எனக்கு பேரின்பம் தருபவளாக இருக்கிறாள்" என்றான் வணிகன்.

இதை வள்ளுவர் இப்படிச் சொல்கிறார்.

1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

காமம் பனையளவாக நிறைய வரும் போது பெண்கள் காதலரோடு தினையளவாகக் கூட ஊடல் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

பெண்கள் தமது கணவர் விரும்புகின்ற போதெல்லாம் பிணங்காது அவனுடன் கூடி மகிழ்ந்தால் எந்தப் பிரச்சினையும் வரமாட்டாது.

1289. மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

காமம் மலரை விட மென்மையானது; அதன் உண்மையை அறிந்து முழுப் பயனையும் பெறக் கூடியவர் மிகச் சிலரே.

1290. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்

என்னினும் தான்விதுப் புற்று.

கண்களால் சிறிது கோபித்துப் பார்த்தளவில் பிணக்கம் கொள்பவள், ஆனாலும் என்னை விடத் தான் முந்தித் தழுவித்தன் பொய்யான கோபத்தை மறந்து கலங்குவாள்.

கணவனுடன் பெண் கோபங்கொண்டிருந்தாலும், கணவனின் விருப்பத்தை அறிந்து அவனை மகிழ்விக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவரைப் போலக் காமத்தைப் பற்றி எந்தப் புலவரும் கூறவில்லை. காமம் எப்படியானது, அது ஆணையும் பெண்ணையும் எப்படி வருத்தும், அதை எப்படித் தீர்க்க வேண்டும் என்று மிகவும் அழகாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிறார். காமத்துப்பாலை இன்றைய அறிஞர்கள் விலக்கி வைத்திருப்பது பெரும் பாவமாகும். யார் வாசிக்காவிட்டாலும் திருமணமானவர்கள் கட்டாயம் பள்ளியறைக்குள் திருக்குறளை வைத்திருத்தல் வேண்டும்.

நல்ல இல்வாழ்வைப் பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

இல்வாழ்வான் எனப்படுபவன் அறத்தின் இயல்பை உடைய பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி ஆகிய மூவரும் நல்வழியில் நிலைபெறத் துணையாவான்.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஓய்ப் பெறுவது எவன்?

ஒருவன் அறநெறிகளுக்குட்பட்டு இல்வாழ்வு வாழ்வதே சிறப்பானதாகும். அதை விடுத்து துறவு வாழ்வினை மேற்கொள்வதால் எந்தப் பயனையும் அவன் அடையமாட்டான்.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

அறநெறி வழிநின்று இல்வாழ்வை மேற்கொள்பவன் பிற முயற்சிகளில் ஈடுபட்டோர் யாவரிலும் சிறந்தவன்.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா; இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பிறரையும் அறவழியில் வாழச்செய்து தானும் அறவழியில் இருந்து விலகாது வாழ்பவனது இல்வாழ்க்கை தவம் செய்வாரைவிட மிக்க வலிமை உடைய வாழ்க்கையாகும்.

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் இருந்தால் மேலும் சிறப்புடையதாகும்.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போல் போற்றப்படுவான்.

இல்வாழ்க்கை தான் மேம்பட்டது. ஒருவனுக்கு நல்ல வாழ்வு அமைய வேண்டுமானால் பண்புள்ள பெண் மனைவியாக

அமைதல் வேண்டும். நல்ல மனைவி என்பது தனது கணவனைத் தெய்வமாக நினைத்து செயற்படும் பெண் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

55. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

தெய்வத்தைப் போல தனது கணவனை மதித்து நடக்கும் பெண் பெய் என்று சொல்லும்போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவாள்.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்புகள் இல்லாளிடம் இல்லாவிட்டால், ஒருவனுடைய வாழ்க்கையில் பல்வேறு விதமான வசதிகள் இருந்தாலும் அதனால் பயன் ஏதும் ஏற்படமாட்டாது.

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்னையும் காத்து தனது கணவனின் நலன்களையும் பேணிக்காத்து அன்பாகப் பேசி வாழ்கின்றவளே பெண்.

58. பெற்றால் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

கணவனின் மன இயல்புகளை அறிந்து அவனது மனம் கோணாமல் இல்லறம் நடாத்தும் பெண்ணானவள் சிறப்புகள் பல உடைய மேலுலக வாழ்வைப் பெறுவாள்.

60. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலன் என்றும் பெரியோர் கூறுவர்.

இதைவிட அன்புடைமை என்ற அதிகாரத்தில் அன்பைப் பற்றி இப்படி வள்ளுவர் கூறுகிறார்.

73. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

அருமையான உயிருக்கு உடலோடு இணைந்து இருக்கின்ற உறவு, அன்போடு இணைந்து வாழ்ந்த வாழ்வின் பயன் என்று கூறுவர் பெரியோர்.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎனும் நாடாச் சிறப்பு.

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

80. அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

இது பொதுவாகக் கூறப்பட்ட போதும் ஒரு குடும்பத்தில் அன்பால் உண்டாகும் சிறப்புக்கள் குறித்தே கூறப்பட்டுள்ளது. கணவனும் மனைவியும் அன்பாக வாழ்ந்தால் குடும்பம் மட்டுமல்ல உலகமும் சிறக்கும். காம இன்பத்தில் திருப்பிப்படாத குடும்பம் நல்ல குடும்பமாக இருக்கமாட்டாது.

78. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

அன்பில்லாத குடும்ப வாழ்க்கையானது வளமற்ற பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தலைப் போன்றது.

79. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு?

புறத்து உறுப்புக்கள் யாவும் அழகானவையாகவும் பலமானவையாகவும் இருந்தாலும் அக உறுப்பாகிய அன்பில்லாவிட்டால் அவற்றால் பயன் ஏதும் இல்லை.

இல்லறம் மேம்பட்டது என்றும், அது தவத்தைவிட மேலானது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?.

தவம் செய்பவர்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டும். என்பதற்காக இல்லறத்தினர் தவம் செய்தலை மறந்தார்கள் போலும்.

காமத்தைத் துறப்பதன் மூலம் தான் கடவுளின் அருளைப் பெறமுடியும். குடும்பமாக வாழ்ந்து சகல இன்பங்களையும் பெறாதவன் சந்நியாசம் பெறமுடியாது. கர்ம யோகம் செய்யும் முனிவனைப் போலக் குடும்பத்தின் கர்மங்கள் யாவற்றையும் முடித்து விட்டுச் சந்நியாசம் செல்லவேண்டும் என்று தான் இந்து தர்மம் கூறுகிறது.

குடும்பக்கடமைகள் அனைத்தையும் பூரணமாகச் செய்து வாழ்க்கையில் திருப்தியடைபவன், தனது கர்மங்கள் பூர்த்தியானதும் ஆசைகளைத் தனது விவேகத்தால் விலக்கிவிட்டு இன்புற்றிருப்பான் என்று இந்து தர்மம் கூறுகிறது.

ஓர் அரசன் தனது கடமைகள் அனைத்தையும் நல்ல முறையில் முடித்துவிட்டுத் தனது மனைவியுடன் காட்டுக்குச்

செல்கிறான். அங்கு அவன் மகிழ்வுடன் சந்நியாசத்தை மேற்கொள்கிறான். அதற்கு மனைவி உதவியாக இருக்கிறாள்.

“வினைத்தலைமை, வினை, வினைப் பயனைப் பெறுதல் ஆகியவற்றை இறைவன் உலகிற்கு உண்டுபண்ணவில்லை. இயற்கையே இங்ஙனம் செய்கிறது” என்று பகவத்கீதையின் ஸந்யாசயோகத்தில் உள்ள பதின்நான்காவது சுலோகம் கூறுகிறது.

இதன்படி மனிதன் தான் தன்னுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கிறான். அவனால் தான் அவனது விதி எழுதப்படுகிறது. அவனது செயல்கள் தான் அவனை வழி நடத்தி அவனது வாழ்வை நிர்ணயிக்கின்றது. நல்லவற்றைச் செய்தவன் நல்ல பயனை அனுபவிக்க, தீமைசெய்தவன் துன்பத்தை அனுபவிக்கிறான்.

யாருடைய பாவபுண்ணியத்தையும் பரமாத்மா பொருட்படுத்துவதில்லை. ஞானம் அக்ஞானத்தால் மூடப்பட்டிருக்கிறது. அதனால் தான் உயிர்கள் மயக்கமடைகின்றன” என்றும் பகவத்கீதையின் பதினைந்தாவது சுலோகம் கூறுகிறது. இதிலிருந்து வாழ்க்கை முறை தான் பாவபுண்ணியங்களை நிர்ணயிக்கிறது என்ற உண்மை புலனாகிறது.

வாழ்க்கையை நல்ல முறையில் அனுபவிக்க நல்லதொரு வாழ்க்கைத்துணை தேவை. இந்துமதம் பொருளை அள்ளிக் கொடுக்கும் இயற்கைகளைப் பெண்ணாகவே உருவகித்து அவற்றிற்குத் தெய்வத்தன்மை கொடுத்து வணக்கத்துக்குரியதாக்கி வைத்திருக்கிறது. பூமியை பூமாதேவி என்றும், நதிகளைக் கங்காதேவி என்றும் உருவகித்துள்ள -

மையை நாம் அறிவோம். புராணங்கள் இதிகாசங்கள் கூடப் பெண்மையைத் தெய்வமாக்கியுள்ளன.

சைவசமயத் தத்துவ நூலான திருமந்திரம், சிவனைவிட அவருடைய சக்தியான திருவருளம்மையை உயர்த்திக் கூறியுள்ளதோடு, சிவன் தான் சக்தியென்றும் சக்தியின்றிச் சிவம் இயங்குவதில்லை என்றும் கூறுகிறது. திருமந்திரத்தின் 2674 ஆவது பாடலில் கூறப்பட்டுள்ளதைப் பாருங்கள்.

"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்குங் சிவமாயிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட்டன்விளையாட்டதே"

சிவபெருமானின் திருமேனி சிவசக்தியேயாகும். அச் சிவனின் அருளாற்றல் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அச் சிவபெருமான் தான் செய்யும் திருவருட்டொழில்கள் அனைத்தும் சிவசக்தியின் வாயிலாகவே செய்தருள்கின்றனன். அச்சிவபெருமானும் திருவருளும் நுண்ணறிவும் அம்பலமாம் திருச்சிற்றம்பலத்தின் கண் விளங்கியருள்கின்றனர். அதனால் எங்கும் சிதம்பரம் என்றார். அவன் செய்தருளும் திருக்கூத்தும் எங்கும் நிறைந்ததே. எங்கும் சிவமாக இருத்தலால் எல்லா உயிர்களும், எல்லா உலகங்களும், எல்லா உலகியற் பொருட்களும் சிவனிறைவில் சார்ந்து நிற்கின்றன. அதனால் அனைத்தும் சிவனருள் திருவிளையாட்டேயாகும்"

குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் கலந்தது; இருவரையும் சமமாகக் கொண்டது. அதை விளக்கத்தான் சிவபெருமான் அர்த்தநாரீஸ்வரராக இருக்கிறார். புராண இதிகாசங்களை எடுத்து நோக்கினால், புராண இதிகாச

நாயகர்களை விடப் புராண இதிகாச நாயகிகளே வலிமையுடையவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. அது போலப் பெண் தெய்வங்கள் தான் சக்தி மிக்கன.இதை நாம் கல்விக்கு சரஸ்வதி, செல்வத்திற்கு இலக்குமி, வீரத்திற்குத் துர்க்கை என இந்து தர்மம் ஒதுக்கி வைத்ததிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

காமம் தீர்க்க முடியாத ஆசையைத் தன்னகத்தே கொண்டது. அதைத் தீர்ப்பவன் மேன்மையுள்ளவனாக வாழ்வான். தேவர்கள் கூடக் காமத்தைப் பூரணமாக அனுபவிக்க வில்லை என்று புராணங்கள் கூறுகின்றன. அப்படியிருக்க மனிதன் எப்படிப் பூரணமாக அனுபவித்திருப்பான். வள்ளுவர் காமத்தை அனுபவிக்கும் முறைகளை விரிவாகக் கூறியுள்ளார். அதுபோலக் காமவசப்பட்ட பெண்களைப் பற்றியும் கூறியுள்ளார்.

1161. மறைப்பேன்மன் யான்இ∴தோ நோயை; இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.

இக்காம நோயைப் பிறர் அறியாமல் நான் மறைப்பேன். ஆனால் இறைக்க இறைக்க ஊறும் ஊற்று நீரைப் போல இது மேலும் மேலும் பெருகிக் கொண்டிருக்கிறது.

1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.

இக்காம நோயைப் பிறர் அறிந்து கொள்ளாமல் மறைக்கவும் முடியவில்லை; இந் நோயை எனக்குத் தந்த காதலருக்குச் சொல்லவும் நாணமாக இருக்கிறது.

1172. தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துஉணராப்
பைதல் உழப்பது எவன்?.

ஆராய்ந்து அறியாமல் அன்று அவரைக் கண்டதும் காதல் கொண்ட என்கண்கள், இந்த துன்ப நிலைக்குக்

காரணம் தாமே என்று அறியாமல் துன்பப்பட்டு வருந்துவது ஏன்?

1174. பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா
உய்வுஇல்நோய் என்கண் நிறுத்து.

எனது கண்கள் தப்பிப் பிழைக்க முடியாத தீராத காம நோயை உண்டாக்கி விட்டு, இப்பொழுது தாமும் அழ முடியாமல் நீர் வற்றிப் போய்த் துன்புறுகின்றன.

1181. நயந்தவர்க்கு நல்காமை தேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க்கு உரைக்கோ பிற?.

எனது காதலர் பிரிவை விரும்பிய போது அதற்கு உடன்பட்டேன்; பிரிந்த பின்பு பசலை உற்ற என் தன்மையை நான் வேறு யாரிடம் போய்ச் சொல்லுவேன்.

அதை விட ஒரு பெண் தான் விரும்புகின்ற படி இன்பமளிக்கும் ஆணையே அளவுக்கதிகமாக விரும்புவாள் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1257. நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

நான் விரும்பிய காதலர் காமத்தால் நான் விரும்பும் இன்பங்களைத் தருவாரானால், நாணம் என்று ஒன்று இருப்பதை நான் அறியாமல் இருந்திருப்பேன்.

1280. பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு.

காதலி தன் கண்களால் காம நோயைத் தெரிவித்து, தன்னை விட்டுப் பிரியாமல் இருக்குமாறு இரத்தல் பெண்மையின் பெருமை என்று கூறுவர்.

1289. மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

காமம் மலரை விட மென்மையானது; அதன் உண்மையை அறிந்து முழுப் பயனையும் பெறக் கூடியவர் மிகச் சிலரே.

1303. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்

புலந்தாரைப் புல்லா விடல்.

தம்மோடு பிணங்கியவரை ஊடல் நீக்கித் தழுவாது செல்லுதல், துன்பத்தால் வருந்துபவருக்கு மேலும் துன்பம் செய்வதைப் போன்றது.

1305. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை

பூஅன்ன கண்ணார் அகத்து.

மலர் போன்ற கண்களை உடைய காதலியின் உள்ளத்தில் உண்டாகும் ஊடலின் சிறப்பே, நல்ல பண்புகள் நிறைந்த நல்ல ஆடவர்களுக்கு அழகாகும்.

அதைவிடப் பேறு பெற்ற பெண்களைப் பற்றியும் வள்ளுவர் விரிவாகக் கூறுகிறார்.

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே

காமத்துக் காழில் கனி.

தாம்விரும்புகின்ற காதலர் தம்மை விரும்புகின்ற பேறு பெற்ற பெண்கள், காமநுகர்ச்சி என்னும் விதையற்ற பழத்தைப் பெற்றவராவர்.

1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு

வீழ்வார் அளிக்கும் அளி.

தன்னை விரும்பும் காதலிக்குக் காதலன் அளிக்கும் அன்பு, உலக உயிர்களைக் காக்க மேகம் பொழியும் மழையைப் போன்றது.

1193. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே

வாழுநம் என்னும் செருக்கு.

தம்மை விரும்பும் காதலரைக் கொண்ட பெண்களுக்கு பிரிவுத்துயரம் இருந்தாலும், அவர் வந்த பின் கூடி வாழ்வோம் என்ற செருக்கு இருக்கும்.

கல்வியில் மேன்மையும், பதவியில் உயர்வும், சொத்துக்கள் பலவும் உள்ள பெண்ணாக இருந்தாலும் அவளைக் கணவன் விரும்பாவிட்டால் அவள் நல்ல பெண் அல்ல என்றும் வள்ளுவர் கூறுகிறார். கணவன் விரும்பியவாறு இன்பத்தைக் கொடுக்கும் பெண் தான் உயர்ந்தவள் என்பது வள்ளுவரது வாதமாகும். இதை இந்துமத நூல்களும் ஏற்கின்றன.

இதை நாம் காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கையில் காண்கின்றோம். சோழ நாட்டிலே உள்ள காரைக்கால் என்ற ஊரிலே தனதத்தன் என்ற வணிகன் ஒருவன் இருந்தான். அவன் தனது மகளை நாகபட்டணத்தில் வாழ்ந்த பரமதத்தன் என்ற வணிகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அவர்களது இல்வாழ்க்கை மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. புனிதவதி தனது கணவன் மீது பேரன்பு பூண்டவள்.

ஒரு நாள் பரமதத்தனைக் காணவந்த வணிகர்கள் இரண்டு மாங்கனிகளை அவனுக்குக் கொடுத்தனர். அவன் அதை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அப்பொழுது புனிவதி சமைத்துக் கொண்டிருந்தாள். அவ்வேளையில் சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடன் அங்கே வந்தார். புனிவதி சிவனடியாருக்கு உணவு கொடுக்க ஆயத்தமானாள். ஆனால் கறிவகைகள் எதுவும் வைக்கவில்லை. அதனால் அவள் சோற்றுடன் மாங்கனி ஒன்றை அரிந்து வைத்துக் கொடுத்தாள்.

சிவனடியார் மகிழ்வுடன் அவள் கொடுத்த உணவை உண்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

அதன் பின் அவளது கணவனான பரமதத்தன் மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்தான். கணவனை அன்போடு வரவேற்று உணவளித்த புனிதவதி, அவன் உண்டதும் மாங்கனியை அரிந்து கொடுத்தாள். அது மிகவும் சுவையாக இருந்தமையால் மற்ற மாங்கனியையும் அரிந்து தரும்படி பரமதத்தன் கேட்டான்.

புனிதவதிக்கு எதுவும் செய்யத் தோன்றவில்லை. வீட்டின் உள்ளே சென்று இறைவனைப் பிரார்த்தித்தாள். சிவனின் திருவருளால் ஒரு மாங்கனி அவளின் கையில் கிடைத்தது. அதைக் கொண்டுவந்து கணவனிடம் கொடுத்தாள். அக்கனி மிகுந்த சுவையுடையதாக இருந்தது. அதனால் ஆச்சரியப்பட்ட பரமதத்தன்; "இக்கனியைப் போன்றதொரு கனியை நான் இதுவரை உண்டதில்லை. முன்னைய கனியை விட இது சுவையில் வேறுபட்டுள்ளது. இது எனது நண்பன் தந்த கனியல்ல. இதை எங்கே பெற்றாய்?" என்று கேட்டான்.

புனிதவதி வணிகன் கொடுத்த கனியில் ஒன்றைச் சிவனடியாருக்குக் கொடுத்ததையும் பின் சிவனருளால் அக்கனி கிடைத்த வரலாற்றையும் சொன்னாள்.

அதை நம்பாத பரமதத்தன் அது போல இன்னொரு கனியைச் சிவபெருமானிடம் பெற்றுத்தருமாறு கேட்டான்.

புனிதவதி வீட்டின் உள்ளே சென்று சிவனைத் தியானித்தாள். மறுகணம் அவளது கையில் ஒரு மாங்கனி வந்தது. அதை அவள் கொண்டுவந்து கணவனிடம் கொடுத்தாள். கணவன் அதை வாங்கியதும், அது மறைந்துவிட்டது. அதனால் பயம் கொண்ட பரமதத்தன் அவளை விட்டுப் பிரிந்து சென்று இன்னொரு பெண்ணைத்

திருமணம் செய்தான். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

பரமதத்தன் திருமணம் செய்து குழந்தையுடன் வாழ்வதைக் கேள்விப்பட்ட புனிதவதி, தனது தகப்பனையும் அழைத்துக்கொண்டு பரமதத்தனைச் சந்திக்கச் சென்றாள். அதை அறிந்த பரமதத்தன் மனைவியுடனும் பிள்ளையுடனும் பயத்துடன் ஓடிவந்து புனிதவதியின் கால்களில் வீழ்ந்து வணங்கினான்.

அதனால் அதிர்ச்சியடைந்த புனிதவதி சிவபெருமானை வணங்கி; ''சிவனே, எனது தெய்வர் அவர். அவரே எனது கால்களில் விழுந்து வணங்கிய பின் நான் வாழவிரும்ப வில்லை'' என்று கூறி பேய் உருவம் பெற்றாரெனப் பெரியபுராணம் கூறுகிறது.

மனைவி எப்பொழுதும் கணவனுக்குக் கீழ்ப்பட்டவளாக இருக்க வேண்டுமென்று இந்து தர்மம் கூறவில்லை. கணவனுக்குச் சமமானவளாக இருத்தல் வேண்டும் என்றே கூறுகிறது. இருப்பினும் இந்துப் பெண்கள் தம் கணவனைத் தெய்வமாக மதிக்கும் பண்புடையவர்கள். அதனால் தான் புனிதவதியார் தனது கணவன், தனது கால்களில் வீழ்ந்து வணங்கியதும் அதிர்ச்சியடைந்தாள்.

உலகத்தவர்கள் புனிதவதியைக் ''காரைக்கால் அம்மையார்'' என்று மதிப்புடன் அழைத்துப் போற்றிய போதும் அவரை, அவரது கணவன் மனைவியாகக் கருதாது தெய்வ அம்சமுள்ள பெண்ணாகக் கருதி வணங்கினான். பெண் தெய்வங்கள் தான் சக்தி மிக்கவை; கேட்டவற்றையெல்லாம் கொடுப்பவை என்று இந்து தர்மம் கூறுகிறது. ஒரு சிறந்த

சைவனான பரமதத்தன் தனது மனைவியோடு கூடி இல்லற இன்பத்தை அனுபவிக்கப் பயந்தான். அது போலத் தனது கணவன் தன்னை மேம்பட்ட பெண்ணாகக் கருதியதைப் புனிதவதியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கடவுள் பக்தி உடைய பெண்களைத் தொடப் பெரும்பாண்மையான கணவன்மார்கள் பயப்படுகிறார்கள். இறைவனை நினைத்து மனமுருகி அனுஷ்டானங்களுடன் விரதங்களை அனுஷ்டிக்கும் பெண்கள் மீது காமுறப் பல ஆண்களுக்குப் பயம். அதைவிட இளைஞர்களுக்கு இப்படியான பெண்கள் மீது மோகம் உண்டாகாது. சிவசின்னங்களைப் பார்க்கும் ஓர் இந்து இளைஞனுக்கு காதலை விடப் பக்தி தான் உண்டாகும்.

சில கணவன்மார் பக்தியுள்ள பெண்களைத் தொடப் பயப்படுவது போல, சில கணவன்மாருக்குப் பக்தியுள்ள தமது மனைவிமாரைப் பார்த்தாலே வெறுப்பு உண்டாகும்.

ஊரில் நான் பல பெண்களைப் பார்த்திருக்கிறேன். கடவுள் மீது பக்தியுள்ள பெண்களின் கணவன்மாரில் அனேகர் குடிகாரர்களாக உள்ளனர். சிலர் தமது மனைவியை விட்டுப் பிரிந்து சென்று இன்னொரு பெண்ணுடன் வாழ்கிறார்கள்.

இந்து தர்மம் ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு கடமைகளை வற்புறுத்துகிறது. இதற்காகத்தான் ஆச்சிரமதர் மங்களை வகுத்துள்ளது.

பிள்ளைப் பருவத்தில் கற்கவேண்டும். இளைஞனானதும் குடும்பத்தனாக வேண்டும். குடும்பத்தனான பின் குடும்பத்தவர் களையும், சுற்றத்தவர்களையும், போக்கற்றவர்களையும், சிவனடியார்களையும், பிதிர்களையும் பேணல் வேண்டும். பின் தான் கடவுளை வணங்கிச் சந்நியாசம் மேற்கொள்ளவேண்டும்.

அதுவும் மனைவியுடன் சேர்ந்தே சந்நியாசத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

கன்னிப்பெண்கள் திருமணமாகவும், நல்லவரன் கிடைக்கவும் சில விரதங்களை மேற்கொண்டால் போதும்.

குடும்பப் பெண்கள் திருமணமாகிப் பல ஆண்டுகள் சென்றும் குழந்தைகள் பிறக்காவிட்டால் அதற்கென உள்ள விரதங்களை அனுஷ்டித்தால் போதும்.

இல்லறத்தில் இணைந்த பெண்கள் தம் குடும்பத்தின் கடமைகளை முழுமனதுடன், தன்னை அர்ப்பணித்து, கணவனுடன் இன்பமாக வாழ்ந்தால் சகல இந்து தார்மங்களையும் அவள் போற்றுகிறாள் என்று அர்த்தம். தத்தம் கடமைகளைசச் சரிவரசந் செய்வது தான் இந்து தர்மம்.

விரதங்களுக்கும் கடவுளை வணங்குவதற்கும் தொடர்பில்லை. விரதம் அனுஷ்டிக்கும் போதும் கடவுளை வணங்கும் போதும் மனச் சுத்தியுடன் பற்றில்லாமல் வணங்கினால் போதும்.

பெண்களுக்குக் கடவுள் தம் கணவர் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. கணவனது மனம் கோணாமல் வாழ்ந்த மைத்ரேகி உபநிடதத்தில் போற்றப்படுகிறாள். எனவே தெய்வப் பெண்ணாக இருந்தாலும் கணவனின் நியாயமான விருப்புக்களைகப் பூர்த்தி செய்யாவிட்டால் அவள் கணவனினது வெறுப்புக்காளாவாள். அதனால் அவளது குடும்பத்தினரும் வெறுப்பர். அதன் மூலம் சமூகமும் தப்பாகக் கதைக்க வாய்ப்பு உண்டாகும்.

1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

உலகத்தவரால் மதிக்கப்படும் பெண்களாக இருந்தாலும் அவள் தன் காதலனால் விரும்பப்படாதவள் என்றால் அவள் தீவினை உடையவளாவாள்.

தான் விரும்பும் காதலன் தான் விரும்பிய இன்பங்களை எல்லாம் கொடுக்க வேண்டுமென்றே பெண் விரும்புவாள் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1195. நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை?.

நாம் காதல் கொண்ட காதலா, தாமும் எம்மீது காதல் கொள்ளாவிட்டால், அவரால் எமக்குக் கிடைக்கும் இன்பம் என்ன?.

இன்பம் அனுபவிக்க வேண்டும் என்ற உணர்வு இருவரிடமும் இருந்தால் தான் பூரண இன்பத்தை அனுபவிக்கலாம் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1196. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

காதல் ஒருவரிடம் இருந்தால் அது துன்பத்தைத் தரும்; காவடியின் பாரம் போல இருபக்கமும் ஒத்திருப்பது இன்பமானது.

1197. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றுஒழுகு வான்?.

காமன், காதலர் இருவர் பக்கத்திலும் ஒப்ப இராமல் ஒருவரின் பக்கம் நின்று இயங்குவதால், என்னுள் ஏற்பட்ட துன்பத்தையும் வருத்தத்தையும் தலைவனுக்கு அறிய வைக்கா னோ?.

கொடுமையான பெண்கள் யார் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1198. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து

வாழ்வாரின் வன்கணார் இல்.

தாம் விரும்பும் காதலரின் இனிமையான சொற்களைக் கேளாமல் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொண்டு உலகத்தில் உயிர்வாழும் பெண்களைப் போலக் கொடுமைக்குரியவர்கள் எவரும் இல்லை.

1199. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு

இசையும் இனிய செவிக்கு.

நான் விரும்பும் காதலர் என்னில் அன்பு கொள்ளாத வேளையிலும், அவரைப் பற்றி மற்றவர்கள் புகழ்வதைக் கேட்டு என் செவிகள் இன்பம் அடைகின்றன.

வள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றில் உபதேசம் செய்கிறார். ஊதாரணமாக இல்வாழ்க்கை எப்படி இருத்தல் வேண்டும்? வாழ்க்கைத்துணைவி எப்படி அமைதல் வேண்டும்? என்று உபதேசமாகவே குறள்களைக் கூறுகிறார். ஆனால் இன்பத்துப்பாலில் தன்னை ஒரு பெண்ணாக உருவகித்துத் தனக்கு என்னென்ன பிடிக்கும், என்னென்ன பிடிக்காது, தனது நிலை எப்படியானது, தனது காதலன் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

இது நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைப் பெண்ணாகக் கருதித் தாம் அவர் மீது தீவிரமான காதல் கொள்வதாகப் பாடியது போன்றதாகும்.

நான் காதல் கொண்டு அதன் தாக்கத்தால் துன்பத்தை அனுபவிக்கிறேன். ஆனால் அவர் என்மீது காதல் கொள்ளாவிடின் எனக்கு எந்தப் பயனும் உண்டாகாது என்றும், இருவரிடமும் காமம் ஒத்திருந்தால் தான் பூரண இன்பத்தை அனுபவிக்க முடியும் என்றும், காதலரிடம் இன்பத்தைப் பெறாது

துன்பத்தை அனுபவிக்கும் பெண்ணைப் போலக் கொடுமையானவர்கள் வேறு யாரும் இல்லை என்று கூறுகிறார்.

இதிலிருந்து ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே வந்து போகும் இன்பங்கள் யாவற்றிலும் காமத்தின் மூலம் வரும் இன்பமே தலையானதென்றும் அதைப் பூரணமாக அனுபவிக்காதவர்கள் கொடுமையான வாழ்க்கையையே வாழ்கின்றனர் என்றும் கூறுகிறார்.

சைவசித்தாந்த நூல்களின் பிழிசாறு தான் திருக்குறள். சைவசித்தாந்தக் கருத்துக்கள் யாவற்றையும் மிகவும் நுட்பமாக வள்ளுவர் இரு அடிகளிற் கூறியுள்ளார். கவிதையின் போக்கை மாற்றிய நூல் திருக்குறள். இரு அடியில் வெண்பா பாடமுடியாதெனச் சங்ககாலப் புலவர்கள் வாதிட்டனர். அதனால் சங்கப் பலகையில் வைக்கத் தகுதியற்ற நூல் திருக்குறள் என்ற நிலையும் அக்காலத்தில் இருந்தது.

இருக்கு, யசுர், சாமவேதங்களில் இல்லற வாழ்வு பற்றிக் கூறப்பட்டுள்ளன. இருக்கு வேதத்தின் யாக்ஞுவல்லியர் தனது இரு மனைவிமாருடன் வாழ்ந்த வாழ்க்கைத் தத்துவமாக மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் காமம் விரித்துக் கூறப்படவில்லை. அதர்வன வேதம் காமத்தைப் பற்றிக் கூறுகிறது. அதர்வணவேதப் பாடல்களின் உட்பொருள் திருக்குறளில் நிறைய இருப்பதாக அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

வள்ளுவரைப் பின்பற்றி விவேகானந்தரும், ‘‘சமயம் என்பது அனுட்டானங்கள் அல்ல ஒழுக்கமே சமயம்’’ என்று கூறுகிறார். ஒருவனது அறவாழ்வு ஒழுக்கம் மிக்கதாக இருந்தால் தான் அது பெறுமதி மிக்கதாக இருக்கும்.

பொருளை ஒருவன் சேர்க்கும் போது அறத்திற்குப்பட்டே சேர்த்தல் வேண்டும்.

அதுபோலத் தனது மனைவியுடன் இன்பத்தை அனுபவிக்கும் போதும் ஒழுக்கத்திற்குட்பட்டே இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று கூறும் வள்ளுவன், ஒரு காதலனும் காதலியும் இன்பத்தை அனுபவிக்கும் போது அவர்கள் விரும்பியவாறெல்லாம் அனுபவிக்கலாம் என்று கூறுகிறார். இப்படி வெளிப்படையாகக் கூறுவது சமூகவாழ்விற்குப் பொருந்தாது என்று அன்று வாழ்ந்த பெரியவர்கள் நினைத்து இன்பத்துப்பாலை மறைத்து வைத்தனர். அதையே இன்றைய அறிஞர்களும் செய்கின்றனர். ஆனால் தற்போதைய நிலை கருதி பாலியற் கல்வியைப் பாடசாலைகளில் கற்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

பண்டைய இலக்கியங்கள் ஒரு தலைவிக்கு காமக்கல்வியைச் செவிலித்தாய் மூலமும், தோழி மூலமும் கற்பித்ததாகப் பண்டைய நூல்கள் கூறுகின்றன.

அறத்துப் பாலிலும், பொருட்பாலிலும் ஒழுக்கத்தையும், தர்மத்தையும், அறவாழ்வையும் எப்படித் திருவள்ளுவர் விளக்கினாரோ அதுபோலவே இன்பத்துப் பாலில் காமத்தைப் பற்றி விளக்குகிறார்.

அறம், தர்மம், ஒழுக்கம் என்பவற்றை வள்ளுவரை விட யாரும் சிறப்பாக எடுத்துரைக்கவில்லை. அதுபோல இன்பத்தையும் வள்ளுவரைப் போல யாரும் கூறவில்லை.

புராணங்களில் எமது தெய்வங்கள் அனுபவித்த இன்பங்களை ரசித்து அனுபவித்துப் படித்த வள்ளுவர்

அவற்றை மனிதர்களும் அனுபவிக்க வேண்டுமென நினைத்தே இன்பத்துப் பாலைப் பாடியுள்ளார்.

1200. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

நெஞ்சமே நீ வாழ்வாயாக,! அன்பு இல்லாதவரிடம் உனது துன்பங்களைச் சொல்கிறாய்! அதை விட எளிது நீ கடலைத் தூர்ப்பது.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இன்பத்தை அனுபவிப்பதில் வெட்கமோ நாணமோ கொள்ளலாகாது. விரும்பியவாறு அனுபவிக்க வேண்டும் என்று புராணங்களும், இதிகாசங்களும் கூறுகின்றன. இதை நாம் பல புராணக் கதைகளில் காண்கிறோம். யானைகள் இரண்டு புணர்வதைக் கண்ட சிவனும் பார்வதி தேவியும் தாமும் யானைகளாக மாறிப் புணரவேண்டும் என்று விரும்பி, யானைகளாக மாறிப் புணர்ந்து மகிழ்ந்தனர். இதனால் யானைமுகக் கடவுள் தோன்றினார்.

தாருகன் என்ற அசுரன் தேவர்களைக் கொடுமைப்படுத்திய போது சித்திரனும் பிரமதேவரும் அஞ்சி நடுநடுங்கி சிவனிடஞ் சென்றனர். அந்த வேளையில் கோளகிரியில் சிவபெருமான் யோக நிலையில் இருந்தார். அதைக் கலைக்க அவர்களால் முடியவில்லை. முருகன் தோன்றினால் தான் தாருகனை அழிக்க முடியும். முருகன் தோன்றவேண்டுமானால் சிவபெருமானுக்கு விரகதாபத்தைத் தூண்ட வேண்டும். அதற்காகப் பிரமனும் இந்திரனும் மன்மதனின் உதவியை நாடினர். அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மன்மதன், மன்மத பாணங்களைச் சிவன் மீது எய்தான். அதனால் யோகநிலை கலைந்து சிவன் காமவசப்பட்டதால் தான் முருகன் தோன்றினான்.

காசிக்கு அருகேயுள்ள காட்டில் பிரம்மதேவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அவருக்குச் சரஸ்வதி பணிவிடை செய்துகொண்டிருந்தாள். ஒருநாள் காமவசப்பட்ட சரஸ்வதி பிரம்மதேவரின் மடியில் படுத்தாள். சரஸ்வதியின் நிலையை உணர்ந்த பிரம்மதேவர் காம உணர்வுடன் சரஸ்வதியை இறுக அணைத்தார். இப்படி விநாயக புராணம் கூறுகிறது.

இந்து தர்ம நூல்கள் எவையும் காமத்தை இழிவாகக் கருதாது உயர்வாகவே கருதியுள்ளன. காமத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் இறைவனை அடைந்து பேரின்ப வாழ்வு வாழலாம் என்று கூறுகின்றன. மக்கள் பேரின்பம் பெறவேண்டும் என்பதற்காகத் தான் இந்துமதக் கடவுள்கள் காமலீலையில் ஈடுபட்டனர்.

“இம்மையில் சரீரத்தை விடுவதற்கு முன்பு காமத்தைத் துறக்க வேண்டும். அப்படித் துறப்பவன் மறுமையில் பேரின்பத்தை அடைவான்” என்று பகவத்கீதை கூறுகிறது. இதை நாம் ஆச்சிரமதர்மத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். எனவே இல்லற இன்பத்தை முழுமையாக அனுபவித்த பின்பு அதைத் துறப்பவன் தான் மேலானவன். அவன், தனது ஆத்மாவைக் கட்டுப்படுத்தும் வல்லமை மிக்கவன் என்று இந்து தர்மம் கூறுகிறது.

பிறப்பும் இறப்பும் இறைவனால் நிகழ்த்தப்படுவது. பிறப்பை உருவாக்க முடியாது; இறப்பைத் தவிர்க்க முடியாது. தற்பொழுது விஞ்ஞானிகள் பிறப்பை உண்டுபண்ணுவதாகச் சொல்கிறார்கள். இறைவனால் படைக்கப்படாததொண்றிலிருந்து ஒரு புதிய உயிரை அல்லது ஒரு புதிய பொருளை உருவாக்கிக் காட்டினால் தான் அது படைப்பு. இறைவன்

எதுவும் இல்லாமல் உயிரைப் படைத்தான். அவனது படைப்பில் இல்லாதது எதுவுமில்லை.

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதங்கள் இருப்பதாக இந்து தத்துவ நூல்கள் கூறுகின்றன.

தேவர்களில் 1,100,000 யோனி பேதங்களும்,

மனிதனில் 900,000 யோனி பேதங்களும்,

நாற்கால் விலங்குகளில் 100,000 யோனி பேதங்களும்

புறவைகளில் 1,000,000 யோனிபேதங்களும்

ஊர்வனவில் 1,500,000 யோனி பேதங்களும்,

நீர்வாழ்வனவில் 1,900,000 யோனி பேதங்களும்,

தாவரங்களில் 1,000,000 யோனி பேதங்களும் உள்ளன.

பிறப்பில்லாவிட்டால் உயிரினங்கள் அழிந்துவிடும். உயிர்கள் தோன்றிய காலம் முதல் இன்றுவரை நிலைத்திருப்பதற்குக் காரணமாவது பிறப்பு. பிறப்பேற்பட வேண்டுமாயின் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேரவேண்டும். ஐந்தொழில்களையும் செய்பவன் இறைவன். இதில் பிறப்பைப் படைத்தல் என்று இந்துதத்துவம் கூறுகிறது. அதை இறைவன் செய்வதாகவும் கூறுகிறது. தலைவனும் தலைவியும் கூடுவது இறைவனும் இறைவியும் கூடுவதாகக் கருதப்படுகிறது. இறைவனும் இறைவியும் எப்படியெல்லாம் கூடி மகிழ்ந்தார்களோ அப்படியெல்லாம் கூடி மகிழ உயிர்களுக்கு உரிமை உண்டென்று இந்து மதத்தத்துவ நூல்கள் கூறுகின்றன.

தெய்வப் புலவரான திருவள்ளுவர் அறத்துப்பாலில் கூறியவற்றையும், பொருட்பாலில் கூறியவற்றையும், தெய்வ வாக்காகக் கருதிச் செயற்படும் மனிதன், அவர் கூறிய இன்பத்துப் பாலையும் அறத்துப் பாலைப் போலவும்

பொருட்பாலைப் போலவும் பின்பற்றி நடந்தால் பேரின்ப நிலையை அடையலாம்.

1102. பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

நோயை நீக்கப் பயன்படுவது மருந்தாகும். ஆனால் அணிகலன்களை அணிந்த இவளால் வந்த நோய்க்கு இவளே மருந்தாக இருக்கிறாள்.

1105. வேட்ட பொழுதின் அவைஅவை போதுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

மலர்களை அணிந்த கூந்தலை உடைய இவளது தோள்கள், நான் விருப்பமான பொருள்களை நினைத்து விரும்பும் போது அப்பொருள்களைப் போலவே இன்பந் தருகின்றன.

1110. அறிந்தோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிந்தோறும் சேயிழை மாட்டு.

நல்ல நூல்களைக் கற்கின்ற ஒவ்வொரு முறையும் அறியாதவற்றை அறிவது போல, அணிகலன்களை அணிந்து அழகோடு இருக்கும் இவளைக் கூடும் போதெல்லாம் புதுமையான இன்பம் ஏற்படுகின்றது.

இவ்வளவு சுவையாகக் காமத்தை வேறு எந்த நூலும் கூறவில்லை. அத்துடன் பெண்ணை வள்ளுவரைவிடச் சிறப்பாக யாரும் வர்ணிக்கவும் இல்லை, பெருமைப்படுத்தவும் இல்லை.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போல் போற்றப்படுவான்.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித்து ஆயினும் இல்.

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்புகள் இல்லாளிடம் இல்லாவிட்டால், ஒருவனுடைய வாழ்க்கையில் பல்வேறு விதமான வசதிகள் இருந்தாலும் அதனால் பயன் ஏதும் ஏற்படமாட்டாது.

54. பெண்ணின் பெருத்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்?

கற்பு என்னும் உறுதி இல்லாளிடத்து இருக்குமேயானால், அவளைவிடப் பெருஞ்செல்வம் கணவனுக்கு வேறு இல்லை.

1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.

தெய்வப் பெண்ணோ! அழகியமயிலோ! கனமான ஆபரணங்களை அணிந்த மனிதப் பெண்ணோ? என்று எனது நெஞ்சம் மயங்குகிறது.

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

எமனோ? கண்ணோ? பெண்மானோ? தெரியவில்லை. ஆனால் இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்று தன்மைகளையும் உடையதாக இருக்கிறது.

1088. ஒள்நுதற்கு ஓஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

போர்க்களத்தில் பகைவர்கள் அஞ்சுவதற்குக் காரணமான எனது வலிமை, இவளது ஒளிபொருந்திய நெற்றியைக் கண்டு தோற்று விட்டதே.

1113. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.

மூங்கில் போன்ற தோள்களை உடைய இவளின் மேனி தளிரையும், பற்கள் முத்தையும், உடல் மலரின் மணத்தையும், கண்கள் வேலையும் ஒத்திருக்கின்றன.

1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து.

தேய்ந்தும் வளர்ந்தும் படிப்படியாக நிறைந்து விளங்குகின்ற சந்திரனில் உள்ள களங்கம் இந்தப் பெண்களின் முகத்தில் உண்டோ? இல்லையே?

இன்பத்துப்பாலில் உள்ள 250 குறள்களும் காமத்தைப் பற்றி மிக நுணுக்கமாகச் சொல்கின்றன. தெய்வீகத் தன்மை மிக்க காமத்தை யோகமாக நினைத்து அனுஷ்டிப்பவன் வாழ்க்கையில் சகல இன்பங்களையும் அனுபவித்த பின் இறைவனை அடைவானென்று இந்து தர்மம் கூறுகிறது.

இந்து தர்மம் ஓர் இந்துவின் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு செயல்களுக்கும் விதியமைத்து வைத்துள்ளது. கோயிலுக்கு எப்படிச் செல்லவேண்டும் என்பதிலிருந்து திருமணம், மரணம் போன்றவை எப்படிச் நடக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. அந்த வகையில் திருமணமானவர்கள் எந்தெந்த நாட்களில் உறவு கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளது.

பெண்ணுக்கு மாதவிடாய் ஆன நாள் முதல் 6, 8, 10, 12, 14, 16ஆவது நாட்களில் கூடி மகிழ்ந்தால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும், 5, 7, 9, 11, 13, 15ஆம் நாட்களில் கூடி மகிழ்ந்தால் பெண் குழந்தை பிறக்கும் என்றும் கூறியுள்ளது. முதல் மூன்று நாட்களும் 20ஆம் நாளுக்குப் பின்பும் கூடியிருக்கக் கூடாது என்றும் கூறியுள்ளது.

வேதம், சாஸ்த்திரங்களில் கூறப்பட்ட சுபமுகூர்த்த வேளையில் இஷ்ட தெய்வத்தின் கோயிலுக்குச் சென்று அவரைத் அர்ச்சித்தல் வேண்டும். பின் வீட்டிற்கு வந்து சுத்தமான இடத்தில் மூன்றாவது ஜாமத்தில் கூடியிருந்தால் சிறந்த பிள்ளைகள் பிறப்பார்கள் என்று தர்மசாஸ்திரம் கூறுகின்றது.

அட்டமி, பௌர்ணமி, அமாவாசை, பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, ஏகாதசி, சதுர்த்தசி ஆகிய நாட்களும் ரோகினி, அத்தம், அனுசம், சுவாதி, ரேவதி, மூலம், உத்தரம், சதயம் ஆகிய நட்சத்திரங்கள் வரும் நாட்களிலும், மாதப்பிறப்பு, வருஷப்பிறப்பு, விரத தினம், விரதத்திற்கு முதல் நாள், அடுத்தநாள், தீட்டு நாட்கள் ஆகிய தினங்களிலும் கூடியிருத்தல் கூடாது. இந்நாட்களில் கூடினால் தீயபிள்ளைகளே பிறப்பார்கள்.

வால்மீகி முனிவர் அருளிய இராமாயணத்திலுள்ள ‘‘சீதாகல்யாணம்’’ என்ற பகுதியைத் தினமும் காலையிலும் மாலையிலும் பாராயணம் செய்தால் திருமணமாகாதவர் களுக்குத் திருமணமாகும். அதுபோல ‘‘புத்திரகாமேஷ்டிபா யாஸதானம்’’ என்ற பகுதியைக் காலையில் பாராயணம் செய்தால் நற்புத்திரர்கள் பிறப்பார்கள்.

கர்ப்பமாகாதவர்கள் கீழ்க்கண்ட மந்திரத்தைத் தினமும் காலையிலும், மாலையிலும் பாராயணம் செய்தால் கர்ப்பமாவார்கள். கர்ப்பம் தரித்த பெண்கள் தினமும் காலையும் மாலையும் பாராயணம் செய்தால் சுகப்பிரசவமாகும். நற்பிள்ளைப் பேற்றை விரும்புவோர் இந்து தர்மம் கூறும் சுபவேளையில் இம்மந்திரத்தை பாராயணம் செய்து கூடிமகிழ்ந்தால் உத்தம புத்திரர்களைப் பெறுவார்கள்.

“நமோ தேவ்யை மஹா தேவ்யை
துர்காயை ஸத தம் நம
புத்ர ஸௌக்யம் தேஹி தேஹி
கர்ப்ப ர‘ாம் குருஷ்வந”

“ஓம் ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீம்
ஐம் ஐம் ஐம் மஹா காளி மஹா ல்‘மீ
மஹா ஸரஸ்வதி ரூபாயை நவகோடி
மூர்த்யை துர்காயை நம”

“ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் துர்க்கார்த்தி நாஸினி
ஸந்தான ஸௌக்யம் தேஹி தேஹி
வந்த்யத்வம் ம்ருதவத் ஸத்வம்சார ஹர ஹர
கர்ப்பர‘ாம் குரு குரு ஸகலாம் பாதாம்”
“குலஜாம் பாஹ்ய ஜாம் க்ருதாம க்ருதாம்ச
நாஸய நாஸய ஸர்வகாத்ராணி ர‘ ர‘
கர்ப்பம் போஷய போஷய ஸர்வோ பத்ரவம்
சோஷய சோஷய ஸ்வாஹா”

“அனேன கவசேனாங்கம் ஸப்தவாராபி மந்த்ரிதம்
ருதுஸ்நாதா ஜலம் பீத்வா ப்வேத கர்ப்பவதீ த்ருவம்
கர்ப்ப பாத ப்யே பீத்வா த்ருடகர்ப்பா ப்ரஜாயதே
அனேன கவசேனாத மார்ஜிதாய நிஸாகமே
ஸர்வ பாதா வினிர் முக்தா கர்ப்பிணி ஸ்யாநீந ஸம்ஸய
அனேன சல சேனே ஹக்ரந்திதம் ரகத தோரகம்”

திருமணமாகாத பெண்கள் வீட்டிலுள்ள வடமேற்கில் உள்ள அறையில் சுவாமி தரிசனம் செய்து, அவ்வறையில்

படுத்து உறங்கினால் விரைவில் திருமணமாகும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

திருமணமான தம்பதிகள் வடமேற்கில் உள்ள அறையில் கூடியிருந்தால் நல்ல பிள்ளைப் பேறு கிடைக்கும் என்றும் வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

இப்படியாக வாழ்வின் ஒவ்வொரு செயலுக்கும் இந்து தர்மம் விதியமைத்துள்ளது. வாழ்வின் முக்கியமான பகுதி இல்லறம். இல்லறம் சிறந்தால் தான் மற்றெல்லா அறங்களும் சிறக்கும். அதனால் ஆணும் பெண்ணும் கூடும் உறவைத் தெய்வத்தன்மை மிக்கதென்று நினைத்துக் கூடி இன்பம் பெறுவோர் தான் வாழ்வில் வெற்றியடைகிறார்கள். அவர்கள் புனித வாழ்வு வாழ்வதால் இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ந்திருப்பார்கள் என்று இந்து தர்மம் கூறுகிறது. இதற்காகத்தான் தமிழ் நாட்டில் திருமணம் முடிந்த பின்பு சாந்தி முகூர்த்தம் வைக்கிறார்கள். சாந்தி என்றால் நிம்மதி, அமைதி, பூரணமடைதல் என்று பொருள்படும். திருமணமானவர்கள் நல்ல நாளில், நல்ல முகூர்த்தத்தில் கூடி முதல் முதலாக மன அமைதி பெறுகிறார்கள். இந்த மன அமைதி வாழ்நாள் முழுவதும் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே இந்து தர்மம் ஆண் பெண் உறவை யோகமாக்கியுள்ளது.

உயிர்கள் விழித்திருக்கும் போது காம உணர்ச்சியும் அவ் உயிர்களின் உடல்களின் விழித்திருக்கும். அதனால் மனிதனைத் தவிர்ந்த உயிர்கள் அதை மறைக்க முடியாது தீர்த்துக் கொள்கின்றன. ஆனால் மனிதன் அதை மறைக்க வேண்டும் என்பதற்காகவே சமயங்கள் விதிமுறை வகுத்து வைத்துள்ளன. இக்காம உணர்ச்சி தீர்க்கப்படாமையால் தான்

உலகில் தீமைகள் நடைபெறுகின்றன. இதை நாம் இதிகாச புராணங்களில் படித்திருக்கிறோம். சமூகத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்துமதக் கடவுள்கள் கூட காம உணர்வால் அவதிப்பட்டனர். ஒரு பெண்ணுக்கும் ஓர் ஆணுக்கும் காம உணர்வு மிகுந்திருப்பது குற்றமுடையதல்ல. அந்த உணர்வு கணவன் மனைவிக்குள் இருந்து, அந்த உணர்வு அடங்கும் வரை கூடி இன்பம் அனுபவித்து அடக்கிக் கொள்வது புனிதமானது என்று இந்து தர்மம் கூறுகிறது.

நல்ல மக்களாக வளர்க்க இந்து தர்மம் பெற்றோருக்குக் கூறும் ஆலோசனைகள் எவை?

நல்ல தாயைப் பெற்றவன் நல்ல தந்தையைப் பெறுவான்.

நல்ல தாய்க்கும் நல்ல தந்தைக்கும் நல்ல மக்களே பிறப்பார்கள்.

பெற்றோரைப் பொறுத்தது தான் பிள்ளைகள்.

நல்ல விளைநிலத்தில் நல்ல விதையை விதைத்தால் நல்ல விளைச்சல் உண்டாகும்.

குடும்ப வாழ்வில் புனிதம் இருத்தல் வேண்டும்; அளவுக்கதிகமான அன்பு இருத்தல் வேண்டும்.

புனிதம் உள்ளவர்களின் உடலிலும் மனதிலும் இச்சை இராது.

புனிதமான பெண் தனது கணவனைத் தெய்வமாக மதித்துப் போற்றுவாள்.

புனிதமான ஆண் தன் மனைவியின் சின்னச் சின்ன விருப்பங்களைக் கூடப் பூர்த்தி செய்வான்.

அவர்களிடம் நிறைந்த புனிதமான அன்பு எவ்வேளையிலும் இருக்கும்.

அதனால் அவர்கள் ஒருவரது விருப்பத்தை மற்றவர் எப்பொருட்டாவது பூர்த்தி செய்வர்.

பசி, தாகம் இவற்றைப் போன்றது தான் காமமும் என்பதை உணருதல் வேண்டும்.

தாகமேற்பட்டால் உடனே தாகம் தீர நீர் அருந்துதல் வேண்டும். இல்லாவிட்டால் அது உடலுக்கும் மனத்திற்கும் தீங்கை உண்டுபண்ணும்.

அது போன்றது தான் பசியும். பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்பார்கள்.

அது போலக் காமம் வந்தாலும் அதைத் தீர்க்காவிட்டால் பல்வேறுகேடுகளைச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் சமூகத்திற்கும் உண்டாக்கும்.

பசியும், தாகமும் தீர்ந்தவன் எவ்வளவு நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறானோ, அதுபோல காம உணர்வுகளைத் தீர்த்தவனும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பான்.

திருமணமான ஆரம்பத்தில் காம உணர்வுகள் அளவுக்கதிகமாக இருக்கும். பின் அது படிப்படியாகப் பூரணத்துவம் பெற்றுச் சாந்தமாகிவிடும். பசிக்கும் போது மட்டும் உணவு வகைகளை அளவோடு உண்ணும் தன்மையைப் போலக் காமமும் மாறிவிடும்.

காம உணர்வு திருப்தியாகத் தீர்த்தவனுடைய வாழ்க்கை எப்பொழுதும் வெற்றியைத் தரும். அவர்கள் சுற்றத்தவர்களுக்கும், சமூகத்திற்கும் எப்பொழுதும் உதவி செய்பவர்களாகவே இருப்பார்கள்.

ஒரு பெண்ணின் மீது காதல் கொள்ளும் போது உணர்வுகள் முதன்மை பெற்றால் அந்தக் காதல் துன்பமானதாகவே மாறும்.

ஊடல் இச்சைகளைத் தீர்க்க முற்படுபவர்களுக்கு நல்ல மக்கள் பிறக்கமாட்டார்கள். எவ்வேளையிலும் அவர்கள் தம் உணர்வுகளுக்கு இரை கொடுக்கவே விரும்புவார்கள்.

இப்படியானவர்கள் தம்மைத் தாம் புரிந்து கொள்ள மாட்டார்கள். திருப்தியையோ பூரண இன்பத்தையோ பெறமாட்டார்கள். கணவனுக்குத் தனது மனைவியின் அங்கங்களின் பொலிவும், அழகும் தான் தெரியும். அவளுக்குள்ளே மறைந்திருக்கும் தெய்வீகம் தெரியாது. அதுபோல மனைவிக்கு கணவனின் பணத்தைப் பற்றியும் பொருளைப் பற்றியுமே புரியும். அவனது ஆற்றல் புரியாது.

ஒரு கணவனும் மனைவியும் முதலில் தம்மைப் புரிந்து கொள்ளல் வேண்டும். பின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அதன் பின் சமயதத்துவங்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இதன் மூலம் அவர்கள் இருவரும் இம்மை வாழ்வைப் பற்றியும் மறுமை வாழ்வைப் பற்றியும் புரிந்து கொள்வார்கள்.

ஒரு பெண்ணும், ஓர் ஆணும் காதலிக்கும் போது அல்லது திருமனமான புதிதில் இவற்றைப் புரிந்து கொள்வார்களா என்று கேட்கலாம்.

ஒரு கரு வயிற்றில் இருக்கும் போது, அக்கருவைச் சுமக்கும் இந்துப் பெண் சமய அனுட்டானங்களைப் பின்பற்றுகிறாள். அதற்கெனப் பல சமய அனுட்டான முறைகளை இந்து தர்மம் உருவாக்கியுள்ளது.

தாயைப் பேணுவதால் கருவில் உள்ள ஆத்மாவும் பேணப்படுகிறது.

ஒரு பிள்ளை பிறந்த நாளில் இருந்து இளைஞனாகும் வரை வீட்டிலும், பாடசாலையிலும், சமூகத்திலும் எவ்வளவு சமய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இவற்றைப் பார்த்துக் குழந்தைகள் பற்றுக்கொள்வார்கள்.

கோயில்களிற் சென்று பார்த்தால் தெய்வங்களே காம உணர்வை ஊட்டுவனவாக இருக்கின்றன. ஆனால் அவற்றைப் பார்த்ததும் பக்தி தான் மேலிடுகிறது.

வீட்டிலும், சமூகத்திலும் உள்ள மிருகங்களும், பறவைகளும் காதல் லீலைகளைப் பகிரங்கமாகச் செய்கின்றன. இவற்றை யாரும் கண்டுகொள்வதில்லை.

"இயற்கைதான் உனது குரு. இயற்கையைப் பார்த்து கற்றுக்கொள். இயற்கை உன்னைப் பூரண மனிதனாக்கும்" என்று இந்து சமய நூல்கள் கூறுகின்றன.

எல்லாவற்றையும் உனக்கு ஆசிரியர் சொல்லித்தர மாட்டார்.

ஆசிரியர் சொல்வதை விட இயற்கை உனக்கு விரிவாகவும், விளங்கும்படியாகவும் கூறும்.

அன்பைப் பற்றி ஆசிரியர் கதைகதையாகக் கூறுகிறார்.

அதுபற்றி நீ பல பக்கம் பக்கமாகக் கட்டுரை எழுதுகிறாய்.

அதைவிட வீட்டில் உள்ள பசுவைப்பார். எத்தனை குணங்களை நீ அதிலிருந்து பூரணமாக விளங்கிக்கொள்ள முடியும்.

நாயைப்பார், மரங்களைப் பார், காகத்தைப் பார் இவற்றிலிருந்து எத்தனை கற்றலைப் பெறமுடியும்.

இந்து ஒருவன் குடிப்பதும் மதவாழ்க்கையை ஒட்டித்தான்; நடப்பதுவும் மதவாழ்க்கையை ஒட்டித்தான்; திருமணம் செய்வதும் மதவாழ்க்கையை ஒட்டித்தான்; கொள்ளையடிப்பதுவும் மதவாழ்க்கையை ஒட்டித்தான்'' என்று சுவாமி விவேகானந்தர் சொல்கிறார்.

காம உணர்வுடன் உனது மனைவியைப் பாராதே. தீய உணர்வுகள் பலவீனத்தாலும் அறியாமையாலுமே உண்டாகின்றன. உனது மனைவியைக் காமத்தைப் பூர்த்தி செய்யும் ஓர் இயந்திரமாக நினைப்பதால் உனக்கு என்ன நன்மை உண்டாகும்? அன்புடனும், பாசத்துடனும், மகிழ்ச்சியுடனும் அவளைப்பார். வாழ்க்கை எப்பொழுதும் இன்பமுடையதாக இருத்தல் வேண்டும். இன்பமுடையதாக வாழ்க்கை அமையவேண்டுமானால் கணவனும் மனைவியும் ஒருவரின் மீது மற்றவர் அன்பு செலுத்த வேண்டும். அன்பு தான் வாழ்கைகை. அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் நியதி என்பதைப் புரிந்து கொள்வோர் என்றும் இன்பமாக வாழ்வார்.

இதை வள்ளுவர் பின்வருமாறு சொல்கிறார்.

60. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

நல்ல மனைவியைப் பெறுபவன் பாக்கியவான். அவன் வாழும் போதே சொர்க்க இன்பத்தை அனுபவிக்கிறான்.

சொர்க்க வாழ்வென்பது சகல சௌபாக்கியங்களையும் பெற்றுக் கவலைகளின்றி எந்நேரமும் மகிழ்வுடன் இருப்பதைக் குறிக்கும்.

இதை இந்துப் புலவரொருவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“இல்வாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை.
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்கு மேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

“இல்லத்தரசியான மனைவி உள்ளத்தில் இருத்தல் வேண்டும். அப்படியில்லாவிட்டால் அவ்வீடு புலிவாழும் குகையாகவே இருக்கும்” என்பது பொருள்.

கணவனைத் திருப்திப்படுத்துவதற்காகத் தன்னை அலங்கரிப்பவள், கணவனின் பணத்திற்காகச் சிரிப்பவள், தேவையில்லாமற் புகழ்பவள், எதற்கும் காரணம் கேட்காது ஒப்புக் கொள்பவள்,

இவர்கள் நல்ல மனைவியாக இருக்கமாட்டார்கள். இவர்களது செயல்களெல்லாம் கணவனைத் திருப்திப்படுத்தித் தமது காரியத்தை முடிப்பதற்காகவே இருக்கும்.

நல்ல மனைவியானவள் தனது கணவனின் வருவாயை அறிந்து அதற்கேற்ப வாழ்வாள்; தனது கணவனின் வருமானத்துக்குள் தனதும் குடும்பத்தினரது ஆசைகளைப் பூர்த்தி செய்வாள்.

ஒரு கணவனைப் பண்புள்ளவனாகவும், உயர்ந்த வனாகவும் ஆக்குவது மனைவியினது நற்குணங்களே. கணவனது சமூக சேவையை ஊக்குவிப்பவள் மனைவி. அவள்

அவனது சமூக சேவைகளுக்கு இடையூறாக இருந்தால் சமூகம் அவளை மதிக்காது.

மனைவி குடும்பத்திற்குரிய நல்ல பண்புகள் அனைத்தையும் கொண்டிருந்தால், அந்தக் குடும்பத்திற்கு எந்தக் குறைகளும் இராது.

கற்புள்ளவளாக வாழ்ந்து, தன் கணவனை நல் வழிப்படுத்தித் தனது புகழையும், தன் குடும்பத்தின் புகழையும் காப்பாற்ற நல்லதொரு குடும்பப் பெண்ணால் தான் முடியும்.

அதனால் தான் நல்ல குடும்பமாகப் பார்த்துப் பெண் எடுக்க வேண்டும் என்று இந்து தர்மம் கூறுகிறது.

நல்ல குடும்பமென்றால் நல்ல சாதியில் பிறந்த பெண் என்று நினைத்தல் கூடாது.

குடிமை என்பதைப்பற்றி வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

952. ஒழுக்கமும் வாய்மையும் காணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றில் இருந்தும் தவறாமல் இயல்பாகவே நல்லவழியில் வாழ்வார்கள்.

954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

பல கோடி ரூபா மதிப்புள்ள பொருள்களைக் கொடுத்தாலும் உயர் குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

958. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

ஒருவனது நல்ல பண்புகளுக்கிடையே பண்பற்ற செயல்கள் காணப்பட்டால், அவனது குடிப்பிறப்புப் பற்றி சந்தேகம் ஏற்படும்.

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச சொல்.

நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைத்த முளை காட்டும். அது போல ஒருவனது வாய்ச் சொல் அவன் எக் குலத்தவன் என்பதைக் காட்டி விடும்.

ஒரு நல்ல மனிதரின் மகன் ஒழுக்கக்கேடான விடயங்களில் ஈடபட்டால் அவன் உண்மையில் அக்குடியில் பிறந்தவன் தானா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும்.

இதைப் பட்டினத்தார் இவ்வாறு பாடியுள்ளார்.

“கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன்கையை
- எடுத்து
அப்புறம் தன்னின் அசையாமல் முன்வந்து
- அயல்வளையில்
ஒப்புடன் சென்று துயில் நீத்துப் பின்வந்து
- உறங்குவாளை
எப்படி நான் நம்புவேன், இறைவா கச்சி ஏகம்பனே!”.

உலகம் பலவிதம். ஆசைகள் பல்லாயிரம்விதம். ஆசைகளால் தான் குடும்பம் சீரழிகிறது என்பதை உணர்ந்து தனது வருமானத்திற்கேற்ற படி வாழும்படி இந்து தர்மம் கூறுகிறது. வருமானத்திற்கேற்றபடி வாழ்க்கையை நடத்துபவள் பெண்.

எல்லாப் பெண்களும் தயாளகுணமுள்ளவர்கள் அல்ல. புரிஷனைக் கொலை செய்பவர்களும் இருக்கிறார்கள். மிகவும்

நல்ல கணவனை நம்பவைத்துப் பலருடன் கூடி மகிழும் பெண்களும் இருக்கிறார்களள. சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் நன்மை செய்வது போலச் செய்து பழிவாங்கும் பெண்களும் இருக்கிறார்கள். இவர்கள் தமது தவறை உணர்ந்து திருந்தலாம் என்று இந்து தர்மம் கூறுகிறது. இருப்பினும் திருந்தாத பலர் பூமியில் வாழத்தான் செய்கிறார்கள். இவர்களால் தான் இன்று உலகெங்கும் கொடுமைகள் நடைபெறுகின்றன.

ஒவ்வொருவரும் செய்யும் செயல்களுக்கான தண்டனைகள் உண்டு. அதை இயற்கை வழங்கும். நாம் கெட்டவர்களைத் திருத்த முயலவேண்டும். திருந்தாதவர்களைக் காலம் திருத்தம்.

இப்படியான குணங்களைக் கொண்ட வீட்டில் பெண் எடுத்தால் தாயின் குணங்கள் கட்டாயம் பிள்ளைக்கும் வந்து சேரும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்து ஞானிகள் சொன்னதை இப்போது மேலைத்தேச உளவியலாளர்கள் கூறுகிறார்கள். இதைத் தற்போதைய அறிஞர்கள் அவர்கள் சொல்லிய புதிய விடயமென நம்பி பலருக்குக் கற்பிக்கிறார்கள்.

ஒரு திருட்டுத் தாய்க்குத் திருடுவது பாவமாகத் தெரியாது.

காம உணர்வுகளுக்கு அடிமையாகிப் பலருடன் உறவு கொள்ளும் தாய்க்குத் தனது பிள்ளை நெறிதவறி நடப்பது தவறாகத் தெரியாது. இதனால் தான் இந்துக்கள் பெண் எடுக்கும் போது நல்ல குடும்பத்தைப் பார்க்க வேண்டும் என்று இந்து தர்மம் கூறுகிறது. ஒரு நல்ல தாய்க்கும் நல்ல தந்தைக்கும் தான் நல்ல பிள்ளைகள் பிறப்பார்கள்.

அறிவுள்ள, சமூகம் போற்றும் பிள்ளையைப் பெற்ற பெற்றோர் என்றும் போற்றப்படுவார்கள்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற நாயன்மார்களதும், பஞ்சபாண்டவர்களினதும் பெற்றோர் இன்றும் போற்றப்படுகின்றனர். அது போலத் துரியோதனனின் பெற்றோர் இன்றும் தூற்றப்படுகின்றனர்.

துன்பங்கள் எல்லோரது வாழ்விலும் வந்து போகும். இந்த உடம்பு தான் துன்பத்திற்கு இலக்காவது என்பதை அறிந்தவர்கள் தமது உடலுக்கு வந்த துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளமாட்டார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவருக்கு எட்டுப்பிள்ளைகள். எட்டுப் பிள்ளைகளையும் அவர் நல்ல முறையில் கற்பித்தார்.

ஆண்களில் மூத்தவர்கள் இருவரும் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் படித்து வைத்தியர்களானார்கள். மற்றய இரு ஆண்கள் ஊர்ப் பாடசாலையில் கற்றனர். ஒருவன் பட்டதாரி ஆசிரியன். மற்றவன் படிப்பைக் குழப்பிவிட்டு வியாபாரம் செய்தான். மற்ற நால்வரும் பெண்கள்.

அதில் மூவர் ஆசிரியர்கள். ஒருத்தி வேலையில்லா தவள். நால்வருக்கும் வசதியான இடங்களில் அவர் திருமணம் செய்து வைத்தார்.

இரு வைத்தியர்களும் பெரும் பணக்காரப் பெண்களைத் திருமணம் செய்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இடைக்கிடை அவர்கள் பணம் அனுப்புவார்கள்.

பட்டதாரி ஆசிரியராகக் கடமை புரிபவன் தன்னையும் பட்டணப் பாடசாலையில் சேர்த்திருந்தால் தானும் வைத்தியராகி இருப்பேன் என்று கூறுவான். அவன் வீட்டாரைக் கவனிப்பதே இல்லை.

ஆசிரியைகளாகக் கடமையாற்றும் பெண்கள் தாம் காதலித்த ஆண்களுடன் சென்றுவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊரில் கடமை புரிந்தனர்.

நாட்டு நிலை கருதி அவர்கள் தமது ஊருக்கு வருவதில்லை. இளைய மகளைத் தனது சகோதரியின் மகனுக்கு உறவு அழியக்கூடாது என்பதற்காகத் திருமணம் செய்து வைத்தார்.

அவன் வசதியானவன். நல்ல தொழில் செய்பவன். அவன் அழகில்லை என்று திருமணமாகும் வரை அப்பெண் அவனைத் திருமணம் செய்ய மறுத்தாள்.

அவர் கட்டாயப்படுத்திச் செய்து வைத்தார். திருமணத்திற்குப் பின் அவள் வீட்டிற்கு வருவதில்லை.

எட்டுப் பிள்ளைகளைப் பெற்றும் அவர் அனாதையாகவே கடைசி வரையும் வாழ்ந்தார். அவருடைய அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய யாரும் இருக்கவில்லை.

எனக்குத் தெரிந்த இன்னொருவர் இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பெரும் விவசாயி. தனது சகோதரியின் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

அவரது மகள் சகோதரனின் மனைவியின் சகோதரனை விரும்பித் திருமணம் செய்தாள். அவன் வர்த்தகன். அவனிடம் பல வாகனங்கள் உண்டு. இரண்டு குடும்பங்களும் அருகருகே இருந்தனர்.

பெற்றோர் சகல வசதிகளோடும் வாழ்கிறார்கள். அவருக்கு நோய் ஏற்பட்டால் மோட்டார் வண்டியில் வைத்தியர் வீட்டிற்கு வந்து சோதித்து மருந்து கொடுப்பார். மாலை நேரங்களில் அவர் தனது பேரப்பிள்ளைகளுடன் உல்லாசமாகப்

பல இடங்களுக்குச் செல்வார். பிள்ளைகள் அவரை நடந்து செல்லாது வாகனத்தில் செல்லுமாறு கூறுவார்கள்.

இருவரைப் பற்றியும் ஊரில் பேசிக்கொள்வார்கள். பெற்றோர் எதைச் செய்தாலும் அதை ஏற்றுக்கொள்பவர்கள் மிகவும் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கிறார்கள்.

எட்டுப் பிள்ளைகளைப் பெற்றவர் விவசாயி. மூத்த பிள்ளைகள் நல்ல நிலைக்கு வந்துவிட்டால் குடும்பத்தைக் கவனிப்பார்கள் என்று நினைத்தார். ஆனால் அவர்கள் தமது இன்ப வாழ்வை நினைத்து விட்டனர்.

பொருளாதார நிலை காரணமாக மற்ற இரு ஆண்களையும் ஊரில் உள்ள பாடசாலையில் சேர்த்தார். அவர்கள் எந்நாளும் அவரைக் குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொருவருடைய விதிப்பயனின் படிதான் அவரவரின் வாழ்க்கை நடைபெறும். பட்டணப் பாடசாலையில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். வருடா வருடம் ஆறு அல்லது ஏழு பேர் மட்டுமே வைத்தியராகின்றனர். முன்நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயிரியல் (மருத்துவம்) விஞ்ஞானம் கற்ற போதும் ஆறேழு பேர் தான் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவாகிறார்கள் என்று கற்பிக்கும் அந்த ஆசிரியர்களுக்குப் புரியவில்லை.

ஊர்ப்பாடசாலையில் இருபத்தைந்து முப்பது மாணவர்கள் தான் உயிரியல் விஞ்ஞானம் கற்கின்றனர். ஆனால் வருடாவருடம் ஓரிருவர் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவாகின்றனர்.

எந்தப் பாடசாலையானாலும் அக்கறையுடன் கற்றால் தான் பரீட்சையில் சித்தியடையலாம் என்பதை ஆசிரியர்களால் கூட உணரமுடியவில்லை.

இது அந்தத் தந்தை செய்த பாவமே தவிர வேறெதுவும் இல்லை.

ஊரவர் அவரைப் 'பாவாத்மா' என்கின்றனர். மற்றவரைப் 'புண்ணியாத்மா' என்கின்றனர். ஊரவர்களுக்குப் புண்ணியத்தைப் பற்றியும் பாவத்தைப் பற்றியும் தெரிகிறது.

மூத்தவன் அமெரிக்காவில் மகப்பேற்றுத்துறையில் கற்று வைத்திய நிபுணணானவன்; இலங்கை மக்களால் மகப்பேற்றுத் துறை நிபுணன் எனப் போற்றப்படுபவன்; அவனிடம் சிகிச்சை பெறப் பல நாட்கள் காத்திருத்தல் வேண்டும். ஆனால் அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. அத்துடன் அவனது சகோதரர்கள் நால்வருக்கும் பிள்ளைகள் இல்லை.

தற்போது அவர்கள் வைத்தியத்தை விட்டுவிட்டு கோயில்களுக்குச் செல்கின்றார்கள்.

ஒருவன் செய்த பாவபுண்ணியங்கள் பெரும்பாலும் பிள்ளைகளாய்த் தான் வருகின்றன.

ஆரம்பத்தில் ஊரவர் இருவரும் வைத்தியர்களானதும் அத்தந்தை பெரும்பாக்கியவான். இனி அக்குடும்பம் மேலோங்கும் என்றனர்.

இப்பொழுது அவர் பாவப்பட்ட சீவன் என்கின்றனர். ஒரு பெற்றோருக்குக் கல்வியறிவு இல்லாத பிள்ளை இருந்தால் அது பெருங் கவலை. ஆனால் அப்பிள்ளை தனது பெற்றோரை நல்ல முறையில் கவனித்தால் அந்தக் கவலை முற்றாகத் தீராவிட்டாலும் ஓரளவு தீரும்.

ஆனால் நன்கு படித்த பிள்ளை தன்னைக் கவனிக்கும் என்று நினைத்திருக்கையில் அது கவனியாது விட்டால் அது பெருங்கவலை.

எட்டுப் பிள்ளைகளைப் பெற்றவர்; "நான் பிள்ளைகளைப் பெற்றிராவிட்டால் மிகுந்த இன்பத்துடன் வாழ்ந்திருப்பேன்" என்று அடிக்கடி புலம்புவதை நான் கேட்டிருக்கிறேன்.

ஒரு நாள் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றவர் அவ்வூரில் வாழ்ந்த பெரியவர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றார். அவருக்கு மனக்குழப்பம் ஏற்படும் போது அவர் அங்கு தான் செல்வார்.

மனம் மிகவும் குழம்பிய நிலையில் வீட்டுக்கு வந்தவரை இன்முகத்துடன் வரவேற்ற அந்தப் பெரியவர் தனது மகளை அழைத்து அவருக்குக் குடிப்பதற்கு ஏதாவது கொண்டுவந்து கொடுக்குமாறு கூறினார்.

"எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. ஏழு பிள்ளைகளும் கண்காணாத இடங்களில் இருக்கிறார்கள். ஊரில் இருப்பவளும் கவனிப்பதில்லை. தம்முடன் கதைப்பதற்காகத் தொலைபேசி ஒன்றை வாங்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடன் ஒரு போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை" அழுதார்.

பெரியவருக்குத் தருமசங்கடமாகிவிட்டது. அவர் அழுவதை அந்தப் பெரியவரால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை.

"ஐயா, அழுவதால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. மனிதன் முதலில் தன்னை அறிந்து கொள்ளல் வேண்டும். அதன் பின் மற்ற உயிர்களின் துன்பங்களை அறிந்து கொள்ளல் வேண்டும். அப்படி அறிந்து கொள்பவன்

தான் இறைவனைப் பற்றி அறிவான். இறைவனை அறிபவன் எல்லோரையும் அறிந்து கொள்வான். பல மனிதர்கள் தம்மைத் தாம் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்'' என்றார்.

''உண்மை தான் ஐயா, நான் இன்று வரை என்னை அறிந்து கொள்ளவில்லை; எனது குடும்பத்தைப் பற்றி அறிந்து கொள்ளவில்லை. அதனால் எனது பிள்ளைகள் படிக்கும் போது, 'நீங்கள் எப்படியாவது மற்றய மாணவர்களை முந்த வேண்டும்' என்று கூறுவேன். அவர்கள் முந்தாவிட்டால் தண்டிப்பேன். அதைவிட எனது மூத்த மகன் வைத்தியரானதும் அவனையும் முந்தவேண்டும் என்று மற்றப் பிள்ளைகளுக்குக் கூறுவேன். அதனால் சிறுவயதிலேயே அவர்களின் மனதில் சகோதரர்களை விடத் தாம் முன்னேற வேண்டுமென்ற எண்ணம் வந்துவிட்டது. அது இப்பொழுது பலமடைந்து ஒருவருக்கொருவர் போட்டி போடும் தன்மையை உருவாக்கிவிட்டது. அதனால் பெற்றோரைக் கவனிப்பதற்கும் முன்வருகின்றார்கள் இல்லை'' என்றார் எட்டுப் பிள்ளைகளின் தந்தை.

கற்றவர்கள், கல்வி என்பது பொருளைத் தேட உதவும் கருவியென்றே கருதுகிறார்கள். இதற்கு உதாரணமாக வாழ்ந்த ஒருவரைப்பற்றிக் கூறுதல் வேண்டும்.

அவர் ஒரு பிரபலமானவர். மனைவி ஆசிரியை. இரண்டு பிள்ளைகள்.

தாய் எப்பொழுதும் மற்றவர்களை நம்பமாட்டார்; ''உங்களை நம்புபவர்கள் மீது மேலான அன்பு கொண்டவர் போல நடந்து அவர்களை ஏமாற்றி உங்களது காரியத்தைப் பார்க்க வேண்டும்'' என்று தமது பிள்ளைகளுக்குக் கூறுவார்.

அவர்கள் பழகும் தன்மையைக் கொண்டு யாரும் அவர்களை நம்பிவிடுவார்கள்.

தமது பிள்ளைகள் தர்மநெறிகளில் இருந்து மீறும் போது அது சரியென்று தானும் நினைத்து, தாம் சம்பந்தப்பட்டவர்களையும் நினைக்க வைப்பாள் அத்தாய்.

இந்த விடயத்தில் அவர்கள் கற்ற கல்வி திருட்டுத் தனங்களுக்கே மிக்க பலன்களைத் தரும். ஆனால் அவர்களது சந்ததி தளைக்காதென்பதை அவர்கள் உணருவதில்லை.

ஒழுக்கமான பெற்றோர் ஒழுக்கக் கேடாக நடக்கும் தம் பிள்ளைகளைத் திருத்த முயல்வார்கள். அதற்காக அவர்களுக்குப் புத்திமதிகள் சொல்வார்கள். அவர்கள் திருந்தாவிட்டால் தெய்வத்திடம் முறையிடுவார்கள். தெய்வம் அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்களைக் கட்டாயம் திருத்தும்.

தீய பெற்றோர் தர்மமான முறையில் வாழ விரும்பும் பிள்ளைகளையும் அப்படி வாழ விடமாட்டார்கள். விபச்சாரியான ஒரு தாய் தனது மகள் விபச்சாரம் செய்வதையே விரும்புவாள். அவள் விபச்சாரம் செய்யாவிட்டாலும் அதைச் செய்யும்படி அவள் தூண்டுவாள். ஏமாற்றுவோரை ஏமாற்றப் பலர் இருப்பார்கள். ஒருவன் அத்தாயின் மகளைக் காதலிப்பதாக நடித்து அவளது கற்பைச் சூறையாடிவிட்டு மறைந்துவிட்டான். தர்மநெறியைக் கடைப்பிடிக்காத பெற்றோருக்குத் தர்மநெறி என்றால் என்னவென்று தெரியாது.

நல்ல குடும்பத்தில் உள்ள பெற்றோர் தம்பிள்ளைகள் தவறிக்கூட கெட்ட வழியில் நடப்பதை விரும்பமாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் தமது பிள்ளைகள் பிறருக்காக வாழவேண்டும் என்றே நினைப்பார்கள்.

கோப்பாய் வடக்கில் வாழ்ந்தவர் கந்தையா. அவர் கிராமசேவகராகக் கடமைபுரிந்தவர். கடமையைக் கண்ணெனப் போற்றி வாழ்ந்தமையால் அவரை அவ்வூர் மக்கள் நடமாடும் தெய்வமாக மதித்து வணங்கினார். சுமார் எழுபத்தைந்து வருடங்களுக்கு முன் அவர் வாழ்ந்தாலும் இன்றும் மகிழ்வுடன் நினைவு கூரப்படுபவர்.

அவரது மகன் ஆறுமுகம். தகப்பனைப் போன்ற குணசீலன். சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்களாகப் போற்றுபவர். அறுபது வருடங்களுக்கு முன்பு சகல வசதிகள் இருந்தும் ஆங்கிலக் கல்வி கற்கச் சென்றால் கிறிஸ்தவ மதத்தைத் தழுவவேண்டும் என்பதற்காகத் தமிழையும் சைவத்தையும் கற்றுப் பேணி ஆசிரியரானவர். சைவப் பண்புகளை உயிராக மதித்து அதன்படி நடப்பவர்.

அவரது மகன் திருமுருகன். அவர் தனது தந்தையின் பெயரின் முதலெழுத்தையும் அடுத்த எழுத்தையும் சேர்த்துத் தனது நாமத்திற்கு முன் இட்டு ஆறுதிருமுருகன் எனப் பெயரிட்டுக் கொண்டவர்.

அவரை வளர்க்கும் போது தந்தையார் சைவத்தைப் பற்றியும், தமிழைப் பற்றியும், சேவையைப் பற்றியும் கூறியே வளர்த்தார்.

"மகனே! உன்னிடமுள்ள கல்வியை வெளிப்படுத்துவதற்கான ஒரே ஒரு வழி, நீ கற்றவற்றை மற்றவர்களும் கற்க வழி செய்வதே".

"சமூகம் இயல்பாகவே ஏற்றத்தாழ்வுகள் மிக்கது. அதனால் அனைவருக்கும் சமவாய்ப்புக்கள் கிடைக்காது. ஆகையால் வாய்ப்புக்கள் குறைந்தவர்களுக்கும், வாய்ப்புக்கள்

இல்லாதவர்களுக்கும் அதை ஏற்படுத்திக்கொடு. சாதியைப் பற்றிச் சிந்திக்காதே. சாதியில் குறைந்தவர்களுக்குத் தான் அதிகளவில் நீ உதவி செய்தல் வேண்டும்''

''எவனொருவனுக்கு இயற்கை பணவசதிகளைக் கொடுக்க வில்லையோ, அத்தகையவர்களுக்கு உதவி செய், பலவீனர்கள், முதியோர்கள், ஏழை எளியவர்கள், ஒதுக்கப் பட்டவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் இவர்களே உனது சகோதரர்களாக இருத்தல் வேண்டும்''

''ஓர் இந்து சமயத்தவன் தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதையும் கடவுள் வழிபாடு போலக் கடைப்பிடித்தல் வேண்டும்''.

''ஏழைகளையும், பலவீனர்களையும், அங்கவீனர்களையும், ஆதரவற்ற முதியவர்களையும், பராமரிப்பற்ற நோயாளர்களையும் கண்டு இரக்கப்படுபவன் தான் சிவபெருமானை உண்மையில் வழிபடுபவனாவான். சிவபெருமானைக் கோயிலில் காணாது சமூகத்தில் காண். திக்கற்றவர்களாக இருப்பவர்கள் அனைவரையும் சிவனென நினை''.

தந்தையின் சொற்களை மந்திரங்களாக ஏற்று நடப்பவர் ஆறுதிருமுருகன். அதனால் அவர் தந்தை கூறிய வழியில் நடப்பதற்காகத் திருமணம் கூடச் செய்துகொள்ளவில்லை.

மக்களின் துன்பங்களை நீக்கி, தன்னால் இயன்றளவிற்கு உதவி செய்து வருகிறார். இன்பங்களைத் தரும் தனது எல்லா ஆசைகளையும் தியாகம் செய்து ஒரு ஞானியைப் போல வாழ்ந்து வருகிறார்.

தன் கல்விப் புலமையை நன்கு வெளிப்படுத்தித் தான் செல்லும் நாடுகளிலெல்லாம் சுவாமி விவேகானந்தரைப் போல வீரசைவப் பிரசங்கங்கள் செய்து, சைவத்தை வளர்த்தும் போராலும் வதியின்மைகளாலும் அல்லலுறும் நம்தேச மக்களின் உயர்வுக்காகத் திடத்துடன் போராடி வருகிறார்.

ஆதரவற்ற முதியோர்க்கென மூளாயில் சகல வசதிகளையும் கொண்ட முதியோர் இல்லம்.

உளக்குறைபாடும், அங்கக் குறைபாடுகளுமுள்ள சிறுவர்களுக்கென சகல வசதிகளும் கொண்ட சிவபூமி என்ற புண்ணியத்தலம்.

ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கென தெல்லிப்பழையில் நல்லதோர் காப்பகம்.

முற்றும் ஆதரவற்றவர்களுக்கென நாடு பூராகவும் இயங்குகின்ற காப்பகங்களுக்கு நிதியுதவி.

கோயில் இல்லா இடங்களுக்குக் கோயில்.

கட்டடங்கள் இல்லாத கோயில்களுக்கும், பாடசாலை களுக்கும் கட்டடங்கள்.

வைத்தியசாலைக்கு நிதியுதவி. நோயாளர் நல்ல முறையில் சிகிச்சை பெற நவீன இயந்திர வசதி.

இவ்வாறு ஆறுதிருமுருகனது சேவை பரந்து விரிந்து செல்வதை உலக மக்கள் மகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்த அருமையான தெய்வத்தன்மை மிக்க சிவனே வந்து அவதரித்ததைப் போன்ற ஒரு தெய்வீகத் தந்தை திருமுருகனுக்கு வந்து வாய்த்ததால் இன்று உலகம் இன்புறுகிறது.

இதை வள்ளுவர் மிகவும் அழகாகக் கூறுகிறார்.

67. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

தந்தை மகனுக்குச் செய்யும் நல்லுதவி, கற்றவர் மத்தியில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனை கல்வியில் மேன்மை அடையச் செய்தலாகும்.

68. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

தம் மக்களின் அறிவுடைமை, தமது குடும்பத்தினருக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் இன்பம் பயப்பதே சிறப்பானது.

எல்லாத் தந்தைமாரும் அப்படிச் செய்யாவிட்டாலும் ஒரு சில தந்தைமார் அப்படிச் செய்வதால் தான் இன்று உலகம் மகிழ்வுடன் இருக்கிறது.

இந்த இடத்தில் எனது தந்தையைப் பற்றியும் சிறிது கூறுதல் வேண்டும்.

அவர் ஆறுமுகத்தின் பள்ளித்தோழர். அதனால் அவரைப் போலவே வாழ்ந்தார். அவர் கடமை புரிந்த கல்லூரியில் உள்ள ஏழைச் சிறார்களுக்கு உதவுவார். அத்துடன் தெய்வ நம்பிக்கை மிக்க அவர் சமயத்திற்குப் பல தொண்டுகள் செய்தவர்.

அதனால் போலும் வெள்ளெருவை விநாயகன் என்னைக் கல்வி அறிவுள்ளவனாக்கி உலகில் வாழும் இந்துக்களுக்கு உபதேசம் செய்ய வைத்துள்ளான்.

ஔவையாரின் ஆத்திசூடிச் சூத்திரங்களுக்குக் கதை எழுதினேன். அவை மலேசியாவில் நடந்த உலகச் சைவ மகா நாட்டில் வெளியிடப்பட்டன.

1330 திருக்குறள் பாக்களுக்கும் கதை எழுதினேன்.

பகவத்கீதையின் 700 சுலோகங்களுக்கு உரையும், விளக்கமும், கதையும் எழுதினேன்.

உலகில் பலகோடி தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் திருக்குறளுக்கும், பகவத்கீதைக்கும், ஆத்திசூடிச் சூத்திரங்களுக்கும் யாரும் முழுமையாகக் கதை எழுதவில்லை.

தற்பொழுது வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் அனைத்தையும் கற்று அவற்றிற்கு எளிய விளக்கங்கள் எழுதி வருகிறேன்.

வள்ளுவர் சொன்ன கைமாற்றை ஆறுதிருமுருகனும் செய்துள்ளார். நானும் செய்துள்ளேன் என்பதை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

70. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.

மகன் தன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு, இவனுடைய தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தாரோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

என்னால் முடிந்தளவு கல்விப் பணியைக் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் செய்துள்ளேன். தற்பொழுது நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து கல்விக்கும் சமயத்திற்கும் பெரும் தொண்டாற்றி வருகிறேன். இது என்னைப் பெற்ற பெற்றோர்கள் தந்த பிச்சையாகும்.

கர்மவினைகளுக்கேற்பத் தான் பிறப்புக்கள் உண்டாகும். ஆனால் கன்மவினையென்று சொல்லிக்கொண்டிராது இறைவனை நினைத்தபடி இந்துதர்மம் கூறும் நற்செயல்களைச் செய்து வந்தால் கன்மவினை அகன்று நல்மக்களாக வாழலாம். இதையே இந்து சமயங்கள் கூறுகின்றன.

ஒவ்வொருவரும் செய்யும் தீமையான செய்ல்கள் தான் பாவங்களாக வந்தடைகின்றன.

ஒவ்வொருவரும் செய்யும் நன்மைகள் தான் புண்ணியங்களாக வந்தமைகின்றன.

அறிவுள்ள பலர் பாவம் என்று தாம் அறிந்து கொண்டவற்றைச் செய்யாது தவிர்த்துவிடுவதை நான் கண்டுள்ளேன்.

தீமைகளைச் செய்யாது வாழ்பவர்களுக்குப் பாவம் சேராது. தீமைகள் செய்து வாழ்பவனுக்குப் புண்ணியம் சேராது.

புண்ணியம் செய்யச் செய்ய பாவம் அகலும். ஆதனால் வாழ்வு சிறக்கும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளுக்குச் சொல்லுதல் வேண்டும்.

பாவமும் புண்ணியமும் விதைகளைப் போன்றவை. அவை முளைத்துப் பலன்தரும்.

தீய செயல்களைச் செய்து விட்டுக் கடவுளை ஆராதிப்பதில் பலன் இல்லை. தீயவற்றைச் செய்தவர்கள் அவை தீயவை என்று தெரிந்து அவற்றை விலக்கிவிட்டு நல்ல வற்றைத் தொடர்ந்து செய்துகொண்டு வந்தால் பாவம் சிறிது சிறிதாகக் குறைந்து முற்றாக இல்லாமற் போய்விடும்.

களவெடுப்பது, மற்றவர்களை ஏமாற்றுவது, நம்பிக்கைத் துரோகம் செய்வது, பொய்பேசுவது எல்லாம் பாவம்.

எனக்குத் தெரிந்த ஒருவர் மேற்கூறியவற்றையெல்லாம் செய்துவிட்டு நல்லூர் உற்சவ காலங்களில் விரதம் அனுஷ்டிப்பார். அதிகாலை நான்கு மணிக்கு அவசர காலச் சட்டம் இருந்தாலும் கொடிக்கம்பத்திற்கு அருகில் இருப்பார். செய்த வினைகள் சூளும் என்று நான் அடிக்கடி கூறுவேன். அவர் சிரிப்பார்.

இறைவன் பணம், பதவி, பகட்டு யாவற்றையும் கொடுப்பான். அவை வரும் போது தீமைகளைச் செய்வோர் பிற்காலத்தில் துன்பமுற்ற வரலாற்றை நாமெல்லாம் அறிந்து வைத்திருக்கிறோம். அதனால் இவற்றையெல்லாம் உங்கள் பிள்ளைகளுக்குக் கூறுங்கள்.

புராண இதிகாசக் கதைகளைக் கூறுங்கள். அவை மிகவும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் எழுதப்பட வேண்டும் என்பதற்காகவே நான் எழுதிவருகிறேன். இதற்காக நம்மண்ணில் வாழ்ந்த பெரியவர்கள் பலரைப் பற்றி எழுதி வருகிறேன். இந்த வரிசையில் ஆறுதிருமுருகனும் ஒருவர்.

எமது நாட்டில் வாழ்ந்த, வாழும் சைவப் பெரியார்களைப் பற்றி உங்கள் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். அவர்களது வரலாறு அவர்களைப் பின்பற்றி வாழச்செய்யும் என்பதற்காகத் தான் இவர்களைப் பற்றி நான் எழுதிவருகிறேன். நான் எழுதி வருவதைச் சம்பந்தப்பட்டவர்கள் அறிந்தார்களோ எனக்குத் தெரியாது. அதைப்பற்றி நான் அக்கறைப்படுவதும் இல்லை. எழுதியதும் எனது நூல்களைப் பிரசுரிப்பவர் இருக்கின்றனர். போட்டி போட்டு எனது நூல்கள் அச்சாகின்றன. அதனால் தற்பொழுது நான் அணிந்துரை கூட வாங்குவதில்லை.

சிவத்தொண்டாகவே இதைச் செய்துவருகிறேன். பரிசு, பாராட்டு, கௌரவிப்பு எதையும் நான் விரும்புவதில்லை. இதற்கான அத்தனை வசதிகளையும் எனது குலதெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையாரும், நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியும் வழங்கிவருகின்றனர். அதனால் தான் ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட முடிந்தது. அத்துடன் அச்சேறவென ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் கைவசம்

உள்ளன. எனவே சைவசித்தாந்தக் கருத்துக்களையும், பாவம் புண்ணியம் என்பவற்றின் அர்த்தத்தையும், சேவையின் தன்மையையும் உங்களது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். அவற்றை உணர்ந்த உங்கள் பிள்ளைகள் உங்களைத் தெய்வமாகப் பூசிப்பார்கள். செய்து பார்த்துவிட்டுக் கூறுங்கள்.

இந்து மதம் பெண்களைத் தெய்வமாக மதிக்கின்றதென்று கூறும் இந்துக்கள் சீர்வரிசை பெறுவதற்காகப் பெண்களையும் பெண்ணைப் பெற்ற பெற்றோரையும் வருத்துவது நியாயமா..? இது இந்து தர்மத்திற்குப் பொருந்துமா...?

திருமணம் என்றால் என்ன என்று இந்து தர்மம் கூறுவதை முதலில் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

திருமணம் என்பது புனிதமான ஒரு சடங்கு. இதை இந்து மதக்குருமார் தெய்வங்களைச் சாட்சியாக வைத்து நடத்தி வைப்பார்கள்.

இது ஒரு பெரிய சமயச்சடங்காக பண்டைக் காலத்திலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

வேதகாலத்திற்கு முன்பிருந்தே இந்துக்கள் திருமணத்தை ஒரு பெரும் சடங்காகக் கொண்டாடி வந்துள்ளனர்.

உமை தக்கனின் மகளாகப் பிறந்து பின் சிவபெருமானைத் திருமணம் செய்த போது தக்கன் ஏராளமான பொருட்களைச் சிவபெருமானுக்குச் சீர்வரிசையாகக் கொடுத்தான் என்று புராணங்கள் கூறுகின்றன.

பிரமதேவரின் புத்திரிகளான சித்தி, புத்தி என்ற இருவரையும் விநாயகப் பெருமான் திருமணம் செய்த போது பிரமதேவர் குபேரனிடம் பொன்னும் மணியும் நவரத்தினமும் கடனாகப் பெற்று விநாயகருக்குச் சீர்வரிசையாகக் கொடுத்தார் என்று விநாயக புராணம் கூறுகிறது.

ஒரு தந்தை தனது மகளை வீரனுக்கு அல்லது அறிவிற் சிறந்த ஒருவனுக்கு மனைவியாகக் கொடுக்கும் போது தனது செல்வச் சிறப்பை உலகிற்குக் காட்டச் சீர்வரிசை கொடுப்பார். அவரின் மதிப்பு, மரியாதை, கௌரவம், செல்வச் சிறப்பு என்பன அவர் கொடுக்கும் சீர்வரிசையில் தங்கியிருந்தது.

ஓர் ஆண் மகனின் கல்வி, அறிவு, வீரம், திறமை என்பவற்றைப் பொறுத்துப் பெண்ணைப் பெற்றோர் சீர்வரிசை வழங்கினர்.

நன்றாக உழைத்துப் பொருளைத் தேடியவன் தனது மகளுக்கு அன்பளிப்பாகத் தன்னிடம் உள்ள பொருட்களைக் கொடுப்பது அன்றைய வழக்காக இருந்தது.

அவர்கள் தமது பெண்பிள்ளைகளுக்குத் திரவியங்களையும் ஆண்பிள்ளைகளுக்கு அரசுரிமையையும் வழங்கி வந்தனர்.

பெரியதொரு வணிகன் இன்னொரு வணிகனையே தனது மகளுக்குக் கணவனாகத் தேர்ந்தெடுத்தான். அப்பொழுது அவன் தன்னிடமுள்ள பொருட்களைக் கொடுப்பான்.

இது தவிர அழகான பெண்ணைக் கண்டு காமுறும் இளைஞர்கள் தம் தகுதிக்கேற்றளவு பொன் கொடுத்து பெண் எடுக்கும் வழக்கமும் அந்நாளில் இருந்தது.

சங்ககாலத்து நூல்களான அகநானூறு, புறநானூறு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை

போன்ற நூல்கள் தமிழர்களின் திருமணச் சடங்கு முறைகளைப் பற்றியும், தமிழர்கள் திருமணத்தின் போது கொடுத்த சீர்வரிசைகள் பற்றியும் கூறுகின்றன.

திருமணம் நிட்சயிக்கப்பட்ட பின் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரையும், உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்து விருந்து வைப்பார்கள். பின் நல்ல நாளில் அறிஞர்கள் கூடித் திருமணம் செய்து வைப்பார்கள். திருமண வேளையில் இறைவழிபாடு நடைபெறும். மங்கள முரசு கொட்டும் வேளையில் மணமகன் மணப் பெண்ணுக்கு மங்கல நாண் சூடுவான். அதன் பின் விருந்து வைக்கப்படும். விருந்தில் இறைச்சி கலந்து சமைக்கப்பட்ட வெண்சோறும் வழங்கப்படும்.

இத்திருமணச் சடங்கில் அக்கினி வளர்க்கப்படவில்லை; தீயை வலம்வரும் நிகழ்வும் இல்லை; பிராமணர்கள் வேதம் ஓதுவதுமில்லை. முழுக்க முழுக்க பெரியவர்களாலேயே திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாறு அகநாநூறு என்ற நூல் கூறுகிறது.

ஆனால் சிலப்பதிகாரம் கண்ணகியின் திருமணத்தின் போது பிராமணர்கள் வேதம் ஓதியதாகவும், கண்ணகியும் கோவலனும் அக்கினியை வலம் வந்ததாகவும், பெண்கள் கூட்டம் கூட்டமாக நின்று மலர்களையும், வாசணைப் பொருட்களையும் தூவி வாழ்த்தியதாகவும் கூறுகிறது.

சங்கமருவிய காலம், பல்லவர் காலத்தை விடச் சோழர் காலத்தில் திருமணங்கள் மிகவும் விமர்சையாகச் செய்யப்பட்டன என்று அக்காலத்தில் எழுந்த நூல்கள் கூறுகின்றன. அரசர்களது திருமணங்கள் பெருவிழாவாகப் பல நாட்கள் கொண்டாடப்பட்டன என்றும் அவ்வேளைகளில் தான

தருமங்கள் செய்யப்பட்டதாகவும் நூல்களில் இருந்து அறிய முடிகிறது.

புராணங்கள் இந்து தெய்வங்களின் திருமண வைபவத்தை விதந்து கூறுகின்றன.

பொதுவாகத் தமிழ் நாட்டை அரசர்கள் ஆண்ட காலத்தில் அரசர்களும், தனவந்தர்களும், வணிகர்களும், நிலச்சுவாந்தர்களும் அழகான பெண்களைப் பெற்றவர்களுக்கு பெரும் பொன்னும் பொருளும் கொடுத்தே பெண்களை எடுத்தனர்.

பெண்களை இந்து தர்மம் செல்வத்திற்குரியவர்களாகவே கருதுகிறது. செல்வத்திற்குரிய அத்தனை பொருட்களையும் பெண்ணாகவே இந்து தர்மம் சிருஷ்டித்துள்ளது.

திருவருளின் ஆற்றல் ஐந்து. இவ் ஐந்தும் முறையே பராசக்தி, ஆதிசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி எனப்படும். இவற்றைத் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி, சாவித்திரி, ராதா என்று கூறப்படும் என்று திருமந்திரம் கூறுகிறது.

புகழ், தனம், சுகம், மோட்சம், மங்களம் என்பவற்றை மக்களுக்குத் துர்க்கை வழங்குவாள்.

சகல செல்வங்களையும் இலட்சுமி வழங்குவாள்.

அரசர்கள் இவளை ராஜ்ஜிய இலட்சுமியாகவும், இல்லறவாசிகள் கிருகலட்சுமியாகவும், புண்ணியவான்கள் ப்ரீதி இலட்சுமியாகவும், சத்திரியர்கள் கீர்த்தி இலட்சுமியாகவும், வைசிகர்கள் வர்த்தக லட்சுமியாகவும், பாவிகள் கலலட்சுமியாகவும் வேதாந்திகள் தயாளலட்சுமியாகவும் வணங்குகிறார்கள்.

வாக்கு, புத்தி, வித்தைகளை அளிப்பவள் சரஸ்வதி.

ராதாதேவி மிகுந்த அழகுடையவள். இவளால் தான் பூமாதேவி தாங்கப்படுகிறாள்.

இவர்களைவிடச் சக்திகளின் ரூபங்களாக கங்காதேவியும், துளசிதேவியும், மானஷதேவியும், சஷ்டி தேவியும், மங்கல சண்டிகையும், காளிதேவியும், பூமாதேவியும் இருக்கிறார்கள்.

இந்து சமயங்கள் உலகைப் பெண்ணாக உருவகித்துப் போற்றுவதால் பெண் தெங்வங்களுக்கு படைக்கின்ற பொருட்கள் யாவற்றையும் பெண்களுக்குச் சீர்வரிசையாகக் கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் கோயில்களுக்குச் செல்லும் போது தமது இயல்புக்கேற்ப அர்ச்சனைப் பொருட்களைக் கொண்டு செல்வதைப் போலத் தனது பெண்பிள்ளைகளுக்குத் திருமணம் ஆகும்போது தம் இயல்புக்கேற்பச் சீர்வரிசை கொடுப்பர்.

அரசன் கொடுப்பதை ஆண்டி கொடுக்கவேண்டும் என்றில்லை. ஒரு பக்தன் பூமாலையைக் கொண்டு செல்கிறான். அவ்வூர் அரசன் வைரங்கள், நவரத்தினங்கள் பதித்த மாலையைக் கொண்டு சென்று தெய்வத்திற்கு அணிவிக்கிறான். அன்பு மிகுதியுடன் அணிவிக்கப்படும் பூ மாலையைத்தான் தெய்வம் விரும்பி ஏற்று அருள் புரிகிறது. அதுபோல ஒரு பெண் மீது கணவன் சொரியும் அன்பைப் பொறுத்தே இல்லறம் சிறக்கிறது. இதை வள்ளுவன் பின்வருமாறு கூறுகிறான்.

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக இருப்பது அன்பும் அறச்செயல்களுமே.

அதுபோலக் கணவனின் உணர்வுகளைப் புரிந்து அவன் நினைக்கும்படி நடந்து, அவனை மகிழ்விக்கும் பெண்ணை அவன் உயிருள்ளவரை நேசிப்பான். அந்த நிலை பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

1105. வேட்ட பொழுதின் அவைஅவை போதுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

மலர்களை அணிந்த கூந்தலை உடைய இவளது தோள்கள், நான் விருப்பமான பொருள்களை நினைத்து விரும்பும் போது அப்பொருள்களைப் போலவே இன்பந் தருகின்றன.

இதுபோல நினைத்த போதெல்லாம் நினைத்தவற்றை எல்லாம் பெண்ணால் தான் கொடுக்க முடியும். அதனால் தான் பெண்களுக்குத் திருமணம் நடைபெறும் பொழுது சீர்வரிசை கொடுக்கும்படி இந்து தர்மம் கூறுகிறது.

1110. அறிந்தோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிந்தோறும் சேயிழை மாட்டு.

நல்ல நூல்களைக் கற்கின்ற ஒவ்வொரு முறையும் அறியாதவற்றை அறிவது போல, அணிகலன்களை அணிந்து அழகோடு இருக்கும் இவளைக் கூடும் போதெல்லாம் புதுமையான இன்பம் ஏற்படுகின்றது.

பெண்தெய்வங்கள் சக்திமிக்கவை. இதுபற்றி பெண் தெய்வவழிபாடு என்ற நூலில் விபரமாக எழுதியுள்ளேன். அது போல மிகுந்த சக்தி வாய்ந்த பெண்கள் பொருள்படைத்தவர்களாக இருத்தல் வேண்டும் என்று இந்து சமயங்கள் நினைக்கின்றன.

பிரகத் சூரண்யக உபநிடதத்தின் இரண்டாவது பாகமான யக்ஞவல்கிய காண்டத்தில் யக்ஞவல்லியர் இவ்வாறு தனது மனைவியான மைந்திரேகிக்குக் கூறுகிறார்.

“ஒரு கணவன் தன் மனைவி மீது செலுத்தும் அன்பு இறைவன் மீது செலுத்தும் அன்புக்குச் சமனானது. அவன் மனைவியின் மீது அன்பு செலுத்துவதன் மூலம் பிரமத்தின் மீது அன்பு செலுத்துகிறான். அதுபோல மனைவியானவள் தன் கணவன் மீது செலுத்தும் அன்பும் பிரமத்தின் மீது செலுத்தும் அன்பாகிறது. இது போல எந்த ஓர் உயிரும் பிற உயிர்கள் மீது செலுத்தும் அன்பும் இறைவனைச் சென்றடைகிறது”

இக்கூற்று அன்பின் மகத்துவத்தையும் இல்வாழ்க்கையின் தன்மையையும் கூறுகிறது.

இதை வள்ளுவர் மிகவும் அழகாகக் கூறுகிறார்.

75. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, எல்லோரிடத்தும் அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அறிஞர் கூறுவர்.

அன்பு உலகில் உள்ள எல்லாப் பொருட்களையும் அள்ளி வழங்கும். அதனால் அன்பான குடும்பத்தனுக்குப் பொருட்களில் ஆசை இராது.

நல்லதொரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து மனைவியாக்கிக்கொள்ளும்படி தான் இந்து தர்மம் கூறுகிறது. நல்ல குடும்பத்தில் உள்ள பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் இளைஞனுக்குச் சீர்வரிசைகளைப் பெண்ணின் பெற்றோர்

கொடுக்கத் தேவையில்லை. தெய்வமே கொடுக்கும் என்று இந்து தர்மம் கூறுகிறது.

ஒரு மனைவி காமத்தில் தனது கணவனைத் திருப்திப்படுத்துவது போல, அவன் விரும்பும் உணவு வகைகளைச் சுவையுடன் சமைத்துக் கொடுத்துத் திருப்திப்படுத்துதல் வேண்டும். அவன் விரும்பும் சுவை எப்படியானது, அவன் விரும்பும் கறிவகைகள் எவை என்பதை மனைவி அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

இந்து தர்மம் பெண்ணை மேம்பட்டவளாகக் கருதுவதற்குக் காரணம் இதுவே. ஒரு கணவன் எதை எதை விரும்புகிறானோ அதையதையெல்லாம் கொடுத்து அவனைத் திருப்திப்படுத்துபவள் பெண். அது தாயாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும் அமைகிறது.

இதற்கு இந்து தத்துவம் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது.

அன்பு செலுத்துவதில் தாயைப் போலவும், ஆலோசனைகள் வழங்குவதில் மந்திரியைப் போலவும்,

அவனுடன் அனுசரித்துப் போவதில் நல்ல நண்பனைப் போலவும்,

துன்பங்களைத் தாங்குவதில் பூமாதேவியைப் போலவும்,

காம இன்பத்தைக் கொடுக்கும் போது தாசியைப் போலவும் வாழ்ந்து கணவனைத் துன்பங்களிலிருந்து விடுவிப்பவள் தான் இந்துப் பெண். அவள் தான் குடும்பவிளக்கு என்று இந்து தர்மம் கூறுவதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

உணவு, ஆரோக்கியம், உடல் உறுதி, நம்பிக்கை போன்றவற்றை மட்டும் கொடுப்பதில்லை. குடும்பத்தில்

அன்னியோன்னியத்தையும், அன்பையும், நெருக்கத்தையும், உண்டாக்கும். சுவை மிக்க உணவு வகைகளை விதம் விதமாகச் சமைத்துக் கொடுக்கும் பெண்ணைக் கணவன் மட்டுமல்ல, அவளது சுற்றமும் நேசிக்கும். அதனால் தான் இந்து தர்மம் உணவிற்கும் பெண்ணிற்கும் மற்றெவற்றிற்கும் இல்லாத முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது.

தொழில் செய்து வருமானத்தைப் பெருக்குபவன் ஆண். அளவறிந்து, மனமறிந்து, இன்பங்கொடுத்து மகிழ்வுடன் வாழச் செய்பவள் பெண். அதனால் தான் உயர்ந்தவற்றையெல்லாம் பெண்ணாக இந்து தர்மம் உருவகித்துச் சிறப்பிக்கிறது.

அழகு என்பது மனத்தின் இயல்பைப் பெறுத்தது. ஒரு புடைவைக் கடைக்குச் செல்லும் பெண்ணானவள் தனக்கு விரும்பிய வர்ணத்தில் ஒரு சேலையைத் தேர்ந்தெடுகிறாள். அந்த வர்ணத்தை அவளது தோழி விரும்பவில்லை. வீட்டில் உள்ள அவளது சகோதரர்கள் இருவரும் விரும்பவில்லை. இதுபோன்றது தான் பெண்ணின் அழகும். இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்திற்கும் சோடிகள் உண்டு. அதைத் தீர்மானிப்பவன் இறைவன். அவனின் தீர்மானப்படி ஒரு நாள் அவர்கள் சோடிசேர்வார்கள்.

வாழ்க்கையும் இறைவனின் சித்தப்படியே நடைபெறுகிறது. பல இலட்ச ரூபாவுக்கான பொருட்களைச் சீர்வரிசையாகப் பெற்றுத் திருமணம் செய்பவன் ஒரிரு வருடங்களில் அவற்றை இழந்து பிச்சைக்காரனாகி விடுவதும் உண்டு.

எதுவும் பெறாமல் ஒரு பெண்ணை விரும்பி அவளைத் திருமணம் செய்த பலர் கோடீஸ்வரராக வாழ்கிறார்கள்.

செய்த வினைப்படி தான் யாவும் நடக்கும். அதனால் நல்லதைச் செய்தால் நல்வினை சேர்ந்து இன்பத்தை அள்ளித்தரும்.

விதைக்காதவன் அறுவடை செய்ய முடியாது. அதுபோல நல்லதைச் செய்யாதவன் நன்மை அடையமுடியாது.

பாவம் செய்து சொத்துச் சேர்ப்பவன் தனது பிள்ளையின் நலனுக்காகச் சீர்வரிசையை அள்ளிக் கொடுப்பான். அவன் கொடுத்த பொருட்கள் சேர்ந்தது போலச் சென்றுவிடும்.

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் அறாவட்டிக்குப் பணம் கொடுப்பார். குறித்த தினத்தில் வட்டிக்காசு கொடுக்கப்படாவிட்டால் இரண்டுமாத வட்டிப் பணத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

எனது நண்பர் ஒருவர் ஓர் இலட்சம் ரூபா அவரிடம் வட்டிக்குப் பெற்றார். மாதம் ஐயாயிரம் ரூபா அவருக்கு வட்டிப் பணமாகக் கொடுத்தல் வேண்டும்.

மூன்று இலட்சம் ரூபா வட்டியாகப் பெற்ற பின்பு தான் எனது நண்பர் வாங்கிய முதலைத் திருப்பிக் கொடுத்தார்.

வட்டிக்குப் பணம் கொடுத்தவர் இருபத்தைந்து இலட்சம் ரூபா கொடுத்துத் தனது மகளுக்கு மாப்பிள்ளை எடுத்தார். மருமகன் வெளிநாடு செல்வதற்காக அப்பணத்துடன் தனது பணத்தில் பதினைந்து இலட்சம் ரூபா சேர்த்து நாற்பது இலட்சம் ரூபாவை வெளிநாட்டு முகவர் ஒருவரிடம் கொடுத்தான். ஐந்து வருடங்கள் கழிந்துவிட்டன. அவன் இன்னும் ஊரில் தான் இருக்கிறான். பணம் பெற்ற முகவர் தலைமறைவாகிவிட்டார். இப்படிப் பல சம்பவங்கள் ஊரில் நடைபெறுகின்றன.

இன்னொருவரும் இதுபோல வட்டிக்குப் பணம் கொடுப்பவர். அவரின் மனைவிக்கு இருதய சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் அவருக்குப் பத்து இலட்சம் ரூபா செலவானது.

ஊரில் வாழும் எத்தனையோ ஏழைகளில் பலர் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். அரசினர் ஆஸ்பத்திரியுடன் அவர்களது நோய்கள் குணமாகி விடுகின்றன. ஆனால் பணக்காரர்களின் குடும்பத்தினருக்கு உண்டாகும் நோய்கள் இலகுவில் மாறுவதில்லை. பல இலட்ச ரூபா செலவான பின்பு தான் மாறுகின்றன.

செல்வம் எல்லோரிடமும் வரும் போகும். ஆனால் நல்ல குணம் எல்லோருக்கும் வராது. செல்வம் தீயவர்களையும் மதிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. பணத்தைப் பற்றி வள்ளுவர் இப்படிச் சொல்கிறார்.

751. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்.

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவனையும் மதிக்கத் தக்கவராகச் செய்யும் தன்மை வாய்ந்தது செல்வத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

755. அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்
புல்லார் புரள விடல்.

அருளோடும் அன்போடும் இல்லாது தீய வழியில் தேடிய செல்வத்தை நற் செயல்களுக்குப் பயன்படுத்தாது தீயதென ஒதுக்கி விடல் வேண்டும்.

758. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து ஒன்று
உண்டாகச் செய்வான் வினை.

ஒருவன் தனது செல்வத்தை வைத்துச் செயலாற்றுவது என்பது, மலையின் மேல் ஏறி நின்று கீழே நடக்கும் யானைப் போரைப் பார்பதைப் போன்றது.

760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

சிறந்ததாகிய பொருளை மிகுதியாகத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒன்றாகச் சேரும் எளிய பொருள்களாகும்.

பொருளைத்தேட வேண்டும். அதை நீதியான முறையில் தேடி அறச்செயல்கள் பலவற்றைச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் இல்லறம் சிறக்கும்.

பண ஆசைமிக்க ஒருவனுக்கு நல்ல மனைவி அமையமாட்டாள்.

எனது பேரனார் அடிக்கடி ஒரு கதை சொல்வார்.

ஒரு கண் இல்லாத பெண்ணைப் பெற்ற ஒரு தந்தை இருபத்தைந்து இலட்சம் ரூபா வரதட்சனையாகக் கொடுத்துத் தனது மகளுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார்.

இதை அறிந்த கல்யாணத் தரகர் ஒருவர் பொருளில் ஆசை மிகுந்த ஓர் இளைஞனை நாடி, அவனை அப் பெண்ணைத் திருமணம் செய்யுமாறு கேட்டார்.

அதற்கு அவன்; இரண்டு கண்களும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை ஐம்பது இலட்சம் ரூபா தரக்கூடிய இடமாகப் பாருங்கள்'' என்றான்.

பொருள் தான் தேவை என விரும்புவோர் விபச்சாரம் செய்யும் பெண்களையும் விரும்பித் திருமணம் செய்வர். அவர்களுக்குப் பணம் தான் முக்கியம். அழகைப் பற்றி

குடும்பத்தைப் பற்றியோ ஆராயமாட்டார்கள். பெண்ணினது கடந்த கால வாழ்க்கையைப் பற்றிப் பிறர் சொன்னாலும் அதை அவர்கள் நம்பமாட்டார்கள். பொருள் ஒன்றையே அவர்கள் நேசிப்பார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒரு சில வருடங்களுக்கு முன்பு தான் இந்த நிலை ஏற்பட்டது.

சங்ககாலம், சங்கமருவிய காலம் போல யாழ்ப்பாணத்து இளைஞரில் பெரும்பாலானோர் காதலித்தே திருமணம் செய்தனர்.

எனது தந்தையார் எந்தப் பொருளும் வாங்கவில்லை.

எனது தந்தையின் சகோதரர்கள் சீர்வரிசை பெறவில்லை.

இலங்கையில் மிகப் பெரிய கல்விமானும் 'நூற்றி எண்பத்தேழு பாடசாலைகளை ஸ்தாபித்து முப்பத்தையாயிரம் மாணவர்ளுக்கு கல்வியூட்டியவருமான இந்துபோட் இராஜரட்ணம் ஐயா அவர்கள் தனது சொத்துக்கள் அனைத்தையும் விற்று பாடசாலைகளுக்குச் செலவு செய்த பின் வாடகை வீட்டிலேயே வாழ்ந்து வந்தார். அவரது பிள்ளைகளைச் சீர்வரிசையில்லாம - லேயே அவரது உறவினர்கள் திருமணம் செய்தனர். இன்று ஓஹோ என்று என்று அந்தக் குடும்பம் வாழ்கிறது.

எனது நண்பர் ஒருவர் வைத்தியர். ஆவரிடம் நோய்க்குச் சிகிட்சை பெற ஒருவர் செல்வது வழக்கம். நாளடைவில் இருவரும் நண்பர்களாகிவிட்டனர்.

வைத்தியர் ஓய்வான நேரங்களில் அவரின் வீட்டுக்கு வருவார். அது வீடல்ல. ஒரு சிறு குடிசை.

முற்றத்தில் நிற்கும் வேப்பமர நிழலில் தான் அவரும் வைத்தியரும் இருந்து கதைப்பார்கள். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். பெரும் அழகி அல்ல அவள். அவள் நோய்வாய்ப்பட்டால் அவரிடம் மருந்து பெறவருவாள்.

சில நாட்களின் பின் வைத்தியரின் தந்தையார் அவரைப் பற்றி ஊரில் விசாரித்துப் பார்த்தார்.

“மிகவும் அருமையான குடும்பம். தாய் இலட்சுமி போன்ற தயாளகுணமுடையவள். பூமாதேவியைப் போலப் பொறுமையும், அள்ளிக் கொடுக்கும் தன்மையும் வாய்ந்தவள்; தனது குடும்பத்தை மட்டுமல்ல அனைவரையும் தன்னுயிர் போல நேசிப்பவள்; அன்னையைப் போல அனைவரையும் அரவணைத்து நடப்பவள்; “கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி” என்று இந்து தர்மம் கூறுகிறது. அவள் தனது கணவரின் மனதை மட்டும் அறிந்து செயற்படுபவள் அல்ல. அவளிடம் உதவி கோரிச் செல்லும் அனைவரினதும் மனமறிந்து செயற்படும் ஒரு தாய் என்றனர் ஊரார்.

மனம் மகிழ்ந்த வைத்தியரின் தந்தையார் ஒரு சுபதினத்தில் அப்பெண்ணினது தந்தையைச் சந்தித்துக் கதைத்தார். சிலதினங்களில் திருமணம் நடைபெற்றது. இன்று வைத்தியரும் மனைவியும் அமெரிக்காவில் வாழ்கின்றனர்.

ஒருவன் செய்யும் நன்மை தீமைகள் அவனுக்கு மனைவியாகவும் மக்களாகவும் நண்பர்களாகவும் சுற்றத்தவர்களாகவும் வரும். இதைத்தடுக்க முடியாது.

நல்ல மனைவி, மக்களைப் பெற்றவன் தனது ஏழு பிறப்புக்களிலும் நன்மையைப் பெறுவான். ஒருவனது ஏழு பிறப்புக்களையும் அறியலாமா என்று பலரும் கேட்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை ஒருவன் ஏழுமுறை பிறந்து பிறந்து இறப்பதல்ல பிறப்பு. கருவிலிருக்கும் போது ஒரு பிறப்பு. பிறந்த பின் மறுபிறப்பு. இளைஞனாக இருப்பது இன்னொரு பிறப்பு. குடும்பஸ்தன் ஆவது இன்னொரு பிறப்பு. குழந்தைகளைக் கற்பிப்பது அடுத்த பிறப்பு. மக்களுக்குத் திருமணம் செய்து வைப்பது அடுத்த பிறப்பு. வயோதிப காலத்தில் சகல வசதிகளோடும் பிள்ளைகள் பராமரிப்பது ஏழாவது பிறப்பு. இவற்றைத்தான் நான் ஏழு பிறப்புக்கள் என்று கூறுவேன்.

கருவில் இருக்கும் நாள் தொடக்கம் தள்ளாத வயது வரும்வரை ஒருவன் அன்பாகவும், பண்பாகவும் பராபரிக்கப் படுகின்றானானால் அவன் வாழ்க்கை முழுவதையும் இன்பமாகக் கழித்தவனாகிறான். அவன் தனது பருவங்கள் தோறும் அனைத்து இன்பங்களையும் அனுபவிக்கிறான்.

வாழ்க்கை என்றவுடன் பணமில்லாவிட்டால் வாழ்க்கை சிறக்காது என்றே பலரும் எண்ணுகிறார்கள். கடவுள் படைத்த உயிரினங்களில் பணத்தைக் கையாளுபவன் மனிதன் மட்டுமே. விலங்குகள், பறவைகள் பணம் வைத்திருக்கின்றனவா...? அவை தான் உலகில் மிகுந்த இன்பத்துடன் வாழ்பவை.

எனது வீட்டு முற்றத்தில் ஒரு கொய்யா மரமுள்ளது. அதில் தினமும் பல காகங்கள் வந்திருக்கும். அவற்றிற்குத் தினமும் நான் உணவு வைப்பேன். அவை உணவைத் தாம் உண்பதில்லை. தமது சோடிக்கு அல்லது தனது குஞ்சுக்கு அள்ளி ஊட்டும். இது தினமும் நடைபெறும். நிகழ்வு. ஒரு கணவன் தனது மனைவிக்கு அல்லது, ஒரு மனைவி கணவனுக்கு ஊட்டிவிடுவார்களா...?

பணத்தால் எதைச் செய்ய முடியும்? உயிரைப் பணம் காப்பாற்றுமா? நிம்மதியைத் தருமா? அல்லது அன்பைத் தருமா..? சங்ககாலத்திலும் சரி அதற்குப் பிந்திய காலங்களிலும் சரி வாழ்ந்த ஓர் ஆண் தனது மனம் கவர்ந்த பெண்ணைக் கண்டால் அவளது நெற்றியின் அழகைப் பார்ப்பான்; அவளது கண்களின் இயல்பைப் பார்ப்பான்; உதட்டைப் பார்ப்பான்; முகத்தைப் பார்ப்பான்; கழுத்தைப் பார்ப்பான்; கூந்தலைப் பார்ப்பான்; கால்களைப் பார்ப்பான். அதை வள்ளுவர் இவ்வாறு சொல்கிறார்.

1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.

தெய்வப் பெண்ணோ! அழகியமயிலோ! கனமான ஆபரணங்களை அணிந்த மனிதப் பெண்ணோ? என்று எனது நெஞ்சம் மயங்குகிறது.

1083. பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை; இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு.

எமன் என்று கூறப்படுபவனை நான் முன்பு கண்டு அறியவில்லை, இப்பொழுது தான் கண்டறிந்தேன். அது பெண் தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்களை உடையது.

1084. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண்.

பெண் தன்மையுடைய இப் பேதைக்கு இருக்கும் கண்கள் கண்டவரின் உயிரைக் கவரும் தோற்றம் கொண்டு மாறுபட்டு இருக்கின்றன.

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

எமனோ? கண்ணோ? பெண்மானோ தெரியவில்லை. ஆனால் இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்று தன்மைகளையும் உடையதாக இருக்கிறது.

1086. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கு அஞர்

செய்யல மன்இவள் கண்.

வளைந்த இவளது புருவங்கள் கோணாமல் நேராக இருந்திருக்குமானால், இவளுடைய கண்கள் நான் நடுங்கும் படியான துன்பத்தைச் செய்யமாட்டாது.

1087. கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்

படாஅ முலைமேல் துகில்

பெண்களுடைய சாயாத கொங்கைகளின் மேல் அணிந்த ஆடை, மதம் பிடித்த ஆண்யானையின் மேல் இட்ட முகபடாம் போன்றது.

தெய்வப் புலவரான வள்ளுவர் அறத்தைப் பற்றி எவ்வளவு ஆழமாகக் கூறியுள்ளாரோ அதை விட மோகம் மிகுந்ததாக இன்பத்தைக் கூறியுள்ளார்.

தற்போதைய ஆண்கள் ஒரு பெண்ணின் உடலமைப்பை பார்ப்பதில்லை. அவளது பொருளாதாரத்தையே பார்க்கின்றனர்; அவளது சகோதரர்கள் இருக்கும் நாட்டைப் பார்க்கின்றனர்.

பெண்தான் குடும்பத்தை நடத்துபவள் என்பதை இன்னும் பலர் புரியாமல் இருக்கிறார்கள். சிவன் சக்தியில்லாவிட்டால் இயங்கமாட்டாரென்று புராணங்கள் கூறுகின்றன. இது உண்மையா என்ற ஆராய்ச்சி தேவையில்லை. ஒரு நல்ல குடும்பத்தை எடுத்துப் பார்த்தால் அக்குடும்பத்தின் தலைவியாக ஒரு பெண் இருப்பதைக் காணலாம்.

சீர்வரிசையை இந்து மதம் ஏன் ஏற்படுத்தியது என்பதை நாம் உணருதல் வேண்டும்.

இந்து மதம் பெண்ணைத் தெய்வமாக்கியதோடு இயற்கை அனைத்தையும் பெண்ணாக உருவகித்துள்ளது. அதனால் பெண்ணைக் கொடுக்கும் போது திரவியங்களையும் கொடுக்கச் சொன்னதே தவிரக் கட்டாயம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தவில்லை.

திரவியங்களுக்குரியவள் பெண் என்பதால் உழைக்கின்ற தகப்பன் தனது பொருட்களைத் தனது அன்பளிப்புகளாகப் பெண்களுக்குக் கொடுத்து வந்தார். இது கட்டளையோ சட்டமோ அல்ல. ஆனால் இன்று இந்து தர்ம நெறிகள் யாவும் அறிவில்லாதவர்களால் மூடநம்பிக்கையாகக் கருதப்படுவது போலச் சந்தர்பவாதிகளால் நல்ல நெறிமுறைகள் தவறாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. அதில் வரதட்சணை முறையும் ஒன்று.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00